|| श्रीः ||
|| श्रीराधाकृष्णपरब्रह्मणे नमः ||



|| पुनर्जन्म, लोकान्तरंच ||

புனர்ஜன்ம, லோகாந்தரம்.

இது
மஹாமஹோபாத்யாய
வேதாந்தகேஸரி பங்காளுடு பிரும்மஸ்ரீ,
கணபதி சாஸ்திரிகள் அவர்களின் முக்கிய சிஷ்யரும்,
வியாகரண வேதாந்த சாஸ்திர பாரங்கதரும், பாகவத,
பகவத்கீதோபன்யாஸகரும், சோதிடமந்திர சாஸ்திர
வித்வானும், 'ஆர்யமத ஸம்வர்த்தனீ'
பத்திராதிபருமான

பிரும்மஸ்ரீ, கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,

அவர்களால் இயற்றி தமது "ஆர்யமத ஸம்வர்த்தனீ"
அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிடப்
பட்டது.

காபிரைட்.] 1926. [விலை அணா 4.

॥ श्रीमते वासुदेवाय नमः ॥

पुनर्जन्म, लोकान्तरञ्च ॥

மறுபிறப்பும், லோகாந்தரமும்.

जन्म=ஜன்ம என்ற பதத்திற்குப் பிறப்பு என்று பொது வாய்ப் பொருள் கொள்ளப் படுகின்றது. ஆயினும் நமதாரிய சாஸ்திரங்களில் **अपूर्वदेहेन्द्रियग्रहणं जन्म** "புதிதாய் ஒரு தேஹம், இந்திரியம் இவைகளை யடைதல் ஜன்மம்" என்று சொல்லப் பட்டிருப்பதால் **पुनर्जन्म**=என்ற பதத்திற்கு ஒரு தடவை ஏதோ ஒரு தேஹத்துடனிருந்து அது அழிந்ததும் பின்னர் மற்றுமோர் தேஹேந்திரியத்தை யடைதல் என்று பொருளேற்படுகின்றது. இதிலிருந்து சரீரமோ, இந்திரியங்களோ மாறின போதிலும், தான்மட்டும் மாறாதவனும், இத்தேஹத்தைவிட வேறானவனும், சரீரமூலம் நேரும் சுகதுக்கங்களை யனுபவிக் கின்றவனும், ஒருவனிருப்பதாக வேற்படும். அவனே ஜீவன் எனப்படுவன் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதினின்றும் மேற்கூறிய படிக்குள்ள ஜீவனுக்கு இத்தேஹத்திற்குப் பின்னர் வரும் தேஹமே **पुनजन्म**="மறுபிறப்பு" என்றேற்பட்டது. அங்ஙனமாயினும், இவ்வித யோக்யதையை யுடைய ஜீவனொருவனை நாம் ஒப்பவேண்டுவது அவசியந்தானாவென்றும், அவ்விதம் ஜீவனையொப்பினும் அவன் வேறு லோகத்தை யடைவதுண்டா வென்றும், ஜீவனு லடையப்படுவதாகச் சொல்லப்படும் வேறு லோகம் என்பது ஒன்றுண்டா? வென்றும் அவ்வித முண்டானல் நாம் அதை யெவ்

விதம் தெளிவாய்த் தெரிந்து கொள்ளுவதென்றும் சங்கை நிகழும். இவ்விஷயமாக நமதார்ய சாஸ்திரங்களில் ஆங்காங்கு வெகுதெளிவாய்ச் சமாதானம் கூறப்பட்டிருப்பதை இந்த வியாஸத்தில் கூடியவரை எழுதுகிறோம்.

சரீரமே ஆத்மா என்ற வாதம்.

ஆக்ஷேபம் अस्ति चेदुपलभ्येत नास्ति चेन्नोपलभ्यते ।
नोपलभ्येत यस्माद्यत्तस्मान्नास्तीह वस्तु तत् ॥

"இருந்தால் அறியப்படும். இல்லாவிடி லறியப்படுவதில்லை. எக்காரணம் பற்றி எது அறியப் படவில்லையோ அக்காரணம்பற்றி அவ்வஸ்து இல்லை யென்றேயேற்படும்," என்றபடி இந்தத் தேஹத்தைவிட வேருக ஆத்மா வென்றவொருவன் இருப்பானுயின் அவன் யாவருலும் அறியப்படவேண்டும். ஜீவனை நேரில் கண்டதாகச் சொல்லுவாரொருவருமில்லை. எக்காரணம் பற்றிப்பார்க்கப் படவில்லையோ அக்காரணம்பற்றி தேஹத்தைவிட வேருக ஜீவனெருவனிருப்பதாக எண்ணுவதற் கிடமில்லை. சரீரமே யாவருலும் நேரில் நன்கு பார்க்கப்படுவதால் சரீரந்தான் ஜீவன் என அனுபவத்தைக் கொண்டு முடிவு செய்கிறோம். மேலும் இவ்விதமே சார்வாகர் என்ற தேஹாத்ம வாதிகளும் சித்தாந்தம் செய்திருக்கின்றனர்.

சார்வாக சித்தாந்த மாவது—உலகில் எவனும் நான் என்ற வோர் எண்ணத்தை யடைகிறுன். அவ்வெண்ணத்தில் சரீரமானது தோற்றத்தை யடைகின்றதே யொழிய குடத்தில் தயிரிருப்பதுபோல சரீரத்தைவிட வேருக ஜீவனை யெவனும் நேரில் கண்டதில்லை. மேலும், பண்டிதன் முதல் பாமரன் வரை, 'நான் பெருத்திருக்கிறேன், நானிளைத்திருக்

கிறேன், நான் போகிறேன், நான் கருத்திருக்கிறேன், நான் அறிகிறேன்' என வியவஹரிப்பதை நாம் அனுபவத்திற் கண்டிருக்கிறோம். இளைப்பு, பெருப்பு, கருப்பு, நடை, அறிவு இவைகளோ சரீரத்தில் கண்கூடாகக் காணக்கிடக்கின்றன. இந்த இளைப்பு. பெருப்பு, கருப்பு, நடப்பு, அறிவு, முதலிய தர்மங்களுக்கு தர்மியாக ஜீவனொருவனை ஒப்புவோமானால் அது அனுபவத்திற்கு ஒப்பாததாகவே யாகும். ஏனெனில்—ஒரு தர்மியின் தர்மமானது மற்றொரு தர்மியுடன் இணைபிரியாது அனுபவிக்கப் பட்டதில்லை. கருநீல புஷ்பத்திலுள்ள கருப்பு என்ற தர்மமானது, அப்புஷ்பத்தைவிட்டு செந்தாமரைப் பூவுடன் இணைபிரியாமல் ஒருபொழுதும் காணப் படுவதில்லை யன்றோ. ஆகவே இளைப்பு, பெருப்பு, கருப்பு, நடை, அறிவு முதலிய தர்மங்களை நாம் சரீரத்திலேயே கண்கூடாகக் காணுவதால் சரீரமும் நான் என்பதும் ஒன்றாகவே தானிருக்க வேண்டும். அவ்விதம் ஒன்றாகவே தான் அனுபவமு மிருந்து வருகின்றது. மேலும் இச்சரீரமானது பிருதிவீ, அப், தேஜஸ் வாயு, என்ற இந்த நான்கு மஹாபூதங்களின் சேர்க்கையாலேயே தானுண்டாயிருக்கின்றது. பிருதிவீ முதலிய நான்கு மஹாபூதங்களிலும் தனித்தனியே சைதன்னிய மில்லாவிடினும், அவை தேஹமாக மாறும்பொழுது சரீரமாக மாறின நான்கு மஹாபூதங்களிலும் சைதன்னியம் என்ற ஓர் புதிய தர்மம் (சக்தி) உண்டாகின்றது. அது எவ்விதமெனின்? தனி வெற்றிலை, தனிப்பாக்கு, தனிச்சுண்ணும்பு இவைகளில் தனித்தனியே சிவப்பும், மதத்தை யுண்டுபண்ணும் சக்தியும் இல்லாவிடினும் இம்மூன்று மொன்றாய்ச் சேர்ந்ததும் மேற்கூறியசக்தி அதில் புதிதாயுண்டாவதை அனுபவத்தில்

நாம் காண்கின்றேமல்லவா? அவ்விதமே நான்கு மஹா பூதங்களும் சரீரமாக மாறினதும் அவற்றில் சைதன்னிய மானது புதிதாய் ஏன் உண்டாகக் கூடாது? அவ்விதமே தானுண்டாகின்றது.

மேலும் "எது இருக்கும் பொழுது எதுவுண்டாகின்றதோ, எது இல்லாவிடில் எது உண்டாவதில்லையோ அது அதைச்சேர்ந்தது" என்றே தான் மேதாவிகள் ஒப்பவேண்டும். ஆகவே அறிவு முதலியன, தேஹமிருந்தாலுண்டாகின்றன. தேஹமில்லாவிடி லுண்டாவதில்லை. இதிலிருந்து அறிவுமுதலியதைத் தேஹதர்மமென்று சொல்லுவதற்கென்னதடை? ஆனது பற்றியே चैतन्यविशिष्टः कायः पुरुषः "சைதன்னியத்துடன் கூடிய சரீரந்தான் புருஷன் (ஜீவன்) எனச்சார்வாக சித்தாந்திகள் உபதேசிக்கலாயினர். ஆகவே மேற்கூறிய படிக்கான அனுபவத்தை யொப்பாவிடில் நேரில் கண்டதை அடியோடு விடுத்து, ஒரு பொழுதும் அனுபவத்திற் காணாத வொன்றை ஸ்தாபிக்க வேண்டி வீணில் பிரயாசைப் படுவதாகத் தான் சொல்லவேண்டிவரும். எனின்?

சமாதானம்—மேற்கூறிய வாரெல்லாம் சொல்லுவது தான் முற்றிலும் அனுபவத்திற்கு முறண்பட்டது. என்பதை பின்னர் கூறுவாம். முதலில் தேஹத்தைவிட ஆத்மாவென்ற ஜீவன் ஒருவன் தனியாய் இருக்கின்றான் என்பதை கூறுவாம். அதாவது:—ஒரே தாயின் வயிற்றிற் பிறந்த இருவருள் ஒருவர் பிறந்தது முதல் ஏழ்மைத்தனத்தாலும், ரோகத்தாலும், இஷ்ட பந்து வியோகத்தாலும், சொல்லொணாத் துயரத்தை யடைந்து வருகிறார். மற்றவரோ, பிறந்தது முதல் ஏராளமான பணத்தாலும், சரீராரோக்கியத்தா

லும், இஷ்டமித்திரச் சேர்க்கையாலும் மஹா சுகத்தை யடைந்து வருகிறார். இவ்விதமே வெவ்வேறு தாயின் வயிற்றிற் பிறந்தபலரிடத்தும் ஒருவருக் கொருவரிடம்நேர் மாருன சுகதுக்கங்களின் அனுபவத்தை நாம் காண்கின்றோம் ஒரே மாதிரியான நான்கு மஹாபூதங்களாலுமே இவ்விரு வர்களின் சரீரமானது உண்டாயிருந்த போதிலும் ஒருவர் சுகத்தையும், மற்றவர் துக்கத்தையும் இடைவிடாது அனு பவிப்பதற்குக் காரணம் என்னே ? இந்நான்கு மஹாபூதங் களுக்கும் புறம்பாய் ஒன்றை யொப்பாதவன் இவ்வித லோகானுபவத்திற்கு யாது காரணம் கூறமுடியும். எது வும்கூற முடியாது. உலகிலோ காரணமில்லாமல் காரிய முண்டாவதில்லை யென்பது யாவருமறிந்த விஷயம். விதை யில்லாமல் முளையுண்டாகுமோ ? ஆனல் சில விடங்களில் இன்ன காரணத்தினின்றும் இன்ன காரியமானது உண்டா யிற்றென்று காரணமும் காரியமும் நேரில் பார்க்கக்கூடிய தாக வுள்ளவிடத்தில் நாம் தெளிவாய் காரண காரியத் தன் மையை யறிகிறோம். காரணமானது நம்மால் காணக்கூடா ததாக விருந்து காரியத்தை மட்டும் கண்டோமானல், நேரில் கண்ட காரியத்தைக் கொண்டு அதற்குத் தகுந்த காரணத் தை ஊஹத்தால் கண்டு பிடிக்கிறோம். அதாவது: கடுங் கோடையில் செடி கொடிகள் யாவும் மண்ணுடன் மண் ணுய்ப் போன ஒருவிடத்தைப் புதிதாய்ச் சென்று பார்த்த வொருவன் இப்பொட்டலில் எவ்விதசெடி கொடிகளுமில்லை யென்றே அப்பொழுது எண்ணுகிருன். அம்மனிதனே வானங்கறுத்து மழைபொழிந்த சில தினங்களுக்குப் பின் னர் அப்பொட்டலைப் பார்க்கும் பொழுது, அங்கு ஏராள மான செடி, கொடிகளின் முளைகளைக் காண்கின்றுன். முளை

யைக் கண்டதும் 'ஒகோ? நாம் முன்னர் பார்க்கும் பொழுது இங்கு ஒன்றுமே யில்லை யென்றல்லவோ எண்ணினேம், அவ்விதம் நாம் எண்ணினது சுத்தத் தவறுகும். இச்சமயம் முளைகள் காணப்படுவதால் இம் முளைகளுக்குக் காரணமான விதைகள் நமது கண்ணுக்குப் புலப்படாவிடினும் காரணமான விதைகள் முன்னரே இங்கு இருந்து தான் தீரவேண்டும்.' என ஒரு முடிவிற்கு வருகிருன். இது போலவே காரணத்தை நேரில் கண்கூடாகக் காணவியலாதவிடத்தில் காரியத்தைக் கொண்டு அதன் காரணத்தை ஊஹித்தறிய வேண்டுவது அவசிய மாவதால் முற்கூறியபடி, ஒரே தாயின் வயிற்றில் பிறந்த இருவருள் ஒருவர் பிறந்தது முதல் சுகியாகவும், மற்றவர் துக்கியாகவும் இருப்பதை நேரில் காணுவதால் இதற்குக் காரணம் ஒன்றிருக்கவேண்டும். அக்காரணமோ இதே பிறவியிலுள்ளதாக எதையும் சொல்லக் கூடாததாக விருக்கின்றது. ஆகவே சென்ற ஜன்மத்திற் செய்த புண்ணிய பாபகர்மங்களையே தான் இவ்வித சுக துக்கானுபவத்திற்குக் காரணமாக ஒப்புக்கொள்ள வேண்டிவருகிறது. அவ்விதம் சென்ற ஜன்மத்திற் செய்த புண்ணிய பாபங்களைக் காரணமாகக் கொள்ளும்பொழுது சென்ற ஜன்மத்தில் புண்ணிய பாபங்களைச் செய்த ஜீவனும் இந்த ஜன்மத்தில் அதன் காரியமான சுக, துக்கங்களை யனுபவிக்கின்ற ஆத்மாவும் ஒருவனே என்பதையும் அவசியம் ஒப்பியே தீரவேண்டிவரும். இதிலிருந்து சென்ற ஜன்மத்தில் புண்ணியம் பாபம் இவை சரீரத்தாற் செய்யப்படினும் புண்ணிய பாபசாதனமான சரீரத்தை விட சரீரியான ஜீவன் ஒருவன் அப்பொழுது இருக்கவேண்டுவது அவசியமாவதுபோலவே இந்த ஜன்மத்திலும் சரீரத்தை

விட வேறாக சரீரியான ஜீவனை யொப்பித் தீறவேண்டியதும் அவசியமாகிவிட்டது.

மேலும். ஒருவிஷயத்தில் பிரவிருத்தி யேற்பட வேண்டுமானுல் இது நமக்கு இஷ்டத்தைத் தரும், என்ற எண்ண மிருத்தல் வேண்டும். அவ்வெண்ண மில்லாவிடில் எவ்விஷயத்திலும், எச்சமயத்திலும் எவனுக்கும் பிரவிருத்தியானது ஒருபொழுதும் ஏற்படுவதில்லை யென்பதை எந்த மனிதனும் ஒப்பியே தீறவேண்டும். இதில் எவற்கு மாக்ஷேபமே கிடையாது. இவ்வித மிருப்பதால் உலகில் குழந்தை பிறந்ததும் தாயின் முலைப்பாலுண்ணுவதில் பிரவிருத்திக்கின்றது. இவ்விதப் பிரவிருத்திக்கு 'இம்முலைப்பாலை யுண்ணுவதானது நமது இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும்' என்ற எண்ணமானது அக்குழவிக் கிருக்க வேண்டுவதவசியமானதென்றேற்படுகின்றது. அவ்வெண்ண மில்லையேல் பாலுண்ணுவதில் பிரவிருத்தி யேற்படுவதற்கில்லை. இக்குழவிக்கோ 'பாலுண்ணல் பசியைப் போக்கும்' என்ற எண்ண முண்டாவதற்குப் போதிய பிரத்யக்ஷாத்மகமான அனுபவமோ இந்த ஜன்மத்தி லேற்பட்டதென்று எவருஞ் சொல்ல வியலாது. ஆகவே பசியுண்டானதும் அப்பசிப்பிணியைப் போக்குவதற்குப் போதிய உணவை அச்சமயமுண்டு பசியைப் போக்கின அனுபவமானது, பிறந்த குழவிக்குப் பாலுண்ணப் பிரவிருத்தி யேற்படுவதற்கு முன்னிருந்திருக்க வேண்டுவது மிகவும் அவசியமாகின்ற தன்றோ? ஆகவே 'பசிதீர்க்கப் பாலுண்ணல்' என்ற இந்த காரியத்திலிருந்து இவ்விதப் பிரவிருத்திக்குக் காரணமானதும், பசியுண்டானதும் அதைப் போக்குவதற்கு வேண்டி பாலையுண்டு பசியைப்

போக்கினதுமான அனுபவமானது இருந்தே தீரவேண்டி வருகின்றது. ஒருதடவை ஒருகாரியத்தில் பிரவிருத்தித் துப் பலனை அனுபவத்திற் கண்டிருந்தா லல்லாது திரும்ப வும் அதே காரியத்தில் ஸ்வாரஸிகமான பிரவிருத்தி யானது ஒருபொழுது மேற்படாததை நாமனுபவத்திற் கண்டிருக் கின்றோமன்றோ? ஆகவே இதற்கு முன்னுள்ள வெகு ஜன்மங்களில் நேர்ந்த அனுபவத்தை இஷ்டமில்லாவிடினும் ஒப்பியே தீரவேண்டு வதவசிய மாகிவிட்டது. இவ்வித மொப்பவேண்டி வருவதிலிருந்து முந்தின ஜன்மத்தை யெடுத்த ஆத்மா வென்ற ஜீவனும் இந்த ஜன்மமெடுத்த ஜீவனும் ஒருவன் தானென்றும், முப்பிறவியில் நேர்ந்த சரீரம் போன போதிலும் ஆத்மா வென்பவன் அழிவற்றவ னுகவே யிருக்கின்றான் என்றும், இவன் சரீரத்தை விட வேறானவன் என்றும் ஒப்பியே தீரவேண்டியதாக வாகிவிட் டது.

மேலும் அசேதனங்களான கல் மரம் முதலிய வஸ் துக்கள் மூலமேற்படும் வீடு முதலியன, வீட்டை விட எவ் விதத்திலும் வேறான ஒரு புருஷனுக்காகவே யேற்படுகின்ற தென்பதை நாம் அனுபவத்தில் காண்கின்றோம். இவ்விதமே ஆகாசம் முதலிய மஹாபூதங்கள் தேஹாகாரமாக மாறுவ தற்கு, அத்தேஹத்தை யனுபவிக் கின்றவனும், உண்மை யில் அத்தேஹத்தை விடவேறானவனும், தேஹமுண்டாவ தற்கு முன்னரே இருக்கின்றவனுமான ஒரு சேதனனுடை ய பிரயோஜனத்தை (உபயோகத்தை)யே காரணமாகச் சொல்லவேண்டி வருகின்றது. இவ்வித மொப்பாவிடில், தனியாய் இதை யனுபவிக்கின்றவன் இல்லாதிருப்பதால் ஆகாசாதி மஹாபூதங்களுக்குச் சரீராகாரமான மாறுதலே

ஒருபொழுது மேற்படுவதற்கிட மில்லாததாகிவிடும். இதிலிருந்து சரீராகாரமான மாறுதலே யேற்படுவதற்கிட மில்லாமலாகும் பொழுது, சரீரவடிவமாக மாறின ஆகாசாதி மஹாபூதங்களினின்றும் சைதன்னியமானது புதிதாயுண்டாகின்ற தென்று சொல்லும் வாதம் வீணில் பயனற்றதாகவே ஆகிவிட்டது.

மேலும் சரீரத்தில் காணப்படும் சைதன்னியத்தை ஆகாசாதிமஹாபூதங்களின் குணங்களாகச் சொல்லுவதற்கு மில்லை. ஏனெனில் ஆகாசாதி மஹாபூதங்களின் குணங்களான ரூபம், சப்தம், ரஸம் முதலியவை உலகில் எவராலும் நன்கு அறியப்படுவதுபோல மஹாபூதங்களின் குணமாக உன்னாற் கூறப்பட்ட சைதன்னியத்தையும் ஏன் நேரில் எவரும் காணக்கூடாது? சைதன்னியமோ நேரில் ரூபாதிகளைப் போலத்தெளிவாய் எவராலும் காணக்கூடியதாகவில்லை. ஆனதுபற்றி சைதன்னியமானது ஆகாசாதி மஹாபூதங்களின் குணங்களன்று, என்றே நாமுறுதி செய்கிறோம்.

மேலும் 'தேஹமிருந்தால் சைதன்னியம் தெரிகிறது, தேஹமில்லாவிடில் தெரிவதில்லை என்பது பற்றி சரீரத்தின் தர்மமாகவே சைதன்னியத்தைச் சொல்லவேண்டும், என்று முன்னர் சொல்லப்பட்டது. அதுவும் சரியானதன்று. ஏனெனில் தேஹமிருக்கும்பொழுதெல்லாம் சைதன்னியமுமிருந்தாலன்றோ தேஹதர்மமாகச் சைதன்னியத்தைச் சொல்லக்கூடும். மரித்த புருஷனிடம் எவ்வித அறிவையும் நாம் காண்பதில்லை. இங்கு சைதன்னியமான தர்மம் காணப்படவில்லையே யன்றி தர்மியான சரீரம் மட்டும் முன்போலவே தானிருக்கின்றது. சரீராகாரமாக மாறின ஆகாசாதி மஹா

பூதங்கள் இன்னிலையிலுமிருக்கவே தானிருக்கின்றன. சரீராகாரமாக மாறின ஆகாசாதி மஹாபூதங்களிருந்தும், பூதகாரியமான சரீரமுமிருந்தும்,சரீரதர்மமாக மட்டும் உன்னுற் சொல்லப்படும் சைதன்னியம் மட்டும் காணப்படாம லிருப்பதற்குக் காரணமென்னே? எந்தத் தர்மிக்கு எதைத் தர்மமாகக் (குணமாகச்) சொல்லுகிறோமோ அந்தத் தர்மமானது தர்மி (குணி) யானதிருக்கும் வரை அதைவிட்டு விலகாதிருப்பதைக் காண்பது போலவே, சைதன்னியமானது தேஹதர்மமாக வருமானுல் தர்மியான தேஹமிருக்கும் வரை யிருக்கவேண்டுவது மிக்க அவசியமன்றோ? தர்மியான மிருதசரீரமிருந்தும் தர்மமான சைதன்னியத்தை அதில் காணுததால் சைதன்னியத்தை தேஹதர்மமாகச் சொன்னது எவ்விதத்திலும் ஒப்பத்தகாததாகவே ஆகிவிட்டது.

சங்கை—மல்லிகையையும், அதன் மணத்தையும் நாம் எடுத்துக் கொள்வோம். இந்த மல்லிகை தர்மியாகவும் மணம் தர்மமாகவும் ஆகும். ஒரு காலத்தில் தர்மியான மல்லிகையும், தர்மமான மணமும் சேர்ந்தே காணப்படினும் காலதோஷத்தால் தர்மியான மல்லிகையினின்றும் தர்மமான மணமே அடியோடு விலகி தர்மியான மல்லிகை மட்டுமே மீதமிருப்பதை நாம் காண்கின்றோமன்றோ! இவ்விதமே சைதன்னியமானது தேஹதர்மமாயினும் காலதோஷத்தால் தர்மியான தேஹத்தைவிட்டு விலகி விடுவதாகவும், தேஹத்தை விட்டு மரணசமயத்தில் விலகினபோதிலும் தேஹதர்மமாகத்தான் அதை யொப்பவேண்டும் என்றும் ஏன் சொல்லக்கூடாது. மேலும் சைதன்னியத்தைத் தேஹதர்மமாகச் சொன்னதற்காக தேஹமிருக்கும் பொழுதெல்

லாம் அது இருக்கவேண்டுமென்ற நியமமில்லை. மணம் மல்லிகையின் தர்மமாயினும், மல்லிகையிலும் சிலஸமயத்தில் மணமில்லாதிருப்பதை நாம் அனுபவத்தில் காண்கின்றோமன்றோ? ஆகவே சைதன்னியத்தை நாமனுபவிக்கும் பொழுதெல்லாம் தர்மியான சரீரத்துடனேயே இருப்பதை அனுபவித்து வருவதால் 'தேஹதர்மம் சைதன்னியம்' என்று நாம்சொன்னதின் கருத்தும் அதை யொட்டியே தான் கொள்ளவேண்டும். ஆகவே, மரணகாலத்தில் தர்மியான சரீரமிருந்தும் தர்மமான சைதன்னியம் காணப்படாமை பற்றி 'சைதன்னியம் தேஹதர்மமாகாது' என்று சொன்னது எவ்விதம் பொருந்தும், எனின்?

உத்தரம்—அதனுண்மையை இங்குகூறுவாம்.

उपयन्नपयन्धर्मः विकरोति हि धर्मिणम्।

'ஒன்றின் தர்மமானது வேறொரு தர்மியுடன் சேர்ந்தாலும், அல்லது ஒன்றின் தர்மமானது தர்மியை விட்டு விலகினாலும் தர்மியான வஸ்துவின் ஸ்வரூபத்தையே நாசமாக்கி விடும்.' எனப் பெரியோர் கூறியிருக்கின்றபடி, மணத்தை மல்லிகையின் தர்மமாகக் கொண்டால் மணமாகிற தர்மமானது தர்மியான மல்லிகையை விட்டு ஒருபொழுதும் நீங்குவதில்லை யென்றுமே தான் ஒப்பவேண்டும். இல்லையேல் மணமாகிற தர்மமானது மல்லிகையை விட்டுவிலகினதும் மல்லிகையின் ஸ்வரூபத்திற்கே நாசமானது உண்டாகி விடும். ஆகவே மல்லிகையை விட்டு மணம் விலகுகின்றது என்பது பகற்கனவே யாகும்.

ஆசங்கை—இவ்விதங் கூறுவது அறிவின் குறைவையோ, உலகானுபவ மின்மையையோ தான் விளக்கும்.

ஏனெனில்? இரவில் மலர்ந்த மல்லிகையைப்பறித்து ஓரிடத்தில் வைத்தோமாயின் அதன் மணம் ஊரெங்கும் பரவிவிடுவதை நாம் காண்பதே அதன் காரணமாகும்.

உத்தரம்—காற்றில் மல்லிகையை வைத்தோமாயின் பலசூக்ஷ்ம அவயவங்கள் ஒன்றுசேர்ந்து ஸ்தூலமாகி மல்லிகையென்ற பெயரடைந்த அவயவியினின்றும், மிக்கச்சூக்ஷ்மமான (நுட்பமான) அவயவங்கள் காற்ருல் அடித்துக் கொண்டு வரப்படுகின்றன. ஆனது பற்றியே தான் சூக்ஷ்மமான மல்லிகையின் அவயவங்கள் எங்கெந்த விடங்களில் படிகின்றனவோ அவ்விடங்களி லெல்லாம் நல்ல மணம் வீசுகின்றது. புதிதாய்ப் பறித்த மல்லிகைக்கும், காற்றில் வைத்தபிறகு வெளியிற் காற்ரு லபஹரிக்கப்பட்ட பல அவயவங்களை யுடைய பழைய மல்லிகைக்கும், எடை, நிறம், மணம், குணம், முதலியவற்றில் குறைவேற்படுவதை நாம் அனுபவத்தில் காண்கிருேம். ஆதலால் மணம் வீசுமிடங்களிலெல்லாம் மல்லிகையின் அவயவமும் பரவி யிருக்கின்றதென்று தான் நாம் கொள்ளவேண்டும். ஆகவே தர்மியான மல்லிகையி னின்றும் தர்மமான மணம்மட்டும் தனியே வெளிவருவதாகச் சொன்னதுதான் அறிவின்மையையும், உலகானுபவமின்மையையும் வெளிப்படுத்து கின்றது. ஆகவே மஹாபூத கார்யமானதும், தர்மியானதுமான சரீரத்தினின்றும் அதன் தர்மமாகச் சொல்லப்பட்ட சைதன்யமானது ஒருபொழுதும் பிரிவதற்கில்லை யென்றும், அவ்விதம் பிரியுமானுல் தர்மியான சரீரமே நாசமடைந்திருக்க வேண்டும் என்றும் ஏற்படும். அனுபவத்திலோ தர்மியானசரீரமானது போட்டவிடத்திலேயே கிடக்க, அதன் தர்மமாகச்

சொல்லப்பட்ட சைதன்னியம் மட்டும் இன்னவிடம்போயிற் றென்று எவராலும் காணக்கூடாதபடி மரணகாலத்தில் மறைந்தே யிருக்கின்றதை நாம் காண்கிறோம். ஆகவே மஹா பூதங்களின் விகாரமான சரீரமிருந்தும், சைதன்னியமானது காணப்படாமை பற்றி "சைதன்னியமானது சரீரத்தின் தர் மமன்று" என்று உறுதி செய்யப்படுகிறது. இதுவரை, தேஹமிருக்கும் பொழுது சைதன்யானுபவ மிருப்பதைக் கொண்டு தேஹதர்மமாகச் சைதன்னியத்தை யொப்பினும் தேஹமிருந்தும் மரணகாலத்தில் சைதன்யானுபவமில்லா மை பற்றி சைதன்யம் தேஹதர்மமாகாது என்று என் சொல்லக்கூடா தென்பதை யெழுதினேம். இனி, தேஹ மிருக்கும் பொழுது சைதன்யானுபவ மேற்பட்ட போதி லும், சைதன்யம் தேஹதர்மமாக ஒருபொழுதுமாகாதென் பதை நிரூபிப்பாம். அதாவது :—உலகில் கறுப்பு, வெளுப்பு முதலிய ரூபங்களை சூரியாதிகளுடைய ஒளியைக் கொண்டு தான் அறியமுடியும், சூரியாதிகளின் ஒளியில்லாவிடில் அவற்றையறியமுடிவதில்லைஎன்பதற்காக ரூபங்களைஒளியின் தர்மங்களாக நாம் ஒப்புவோமா? ஒருபொழுது மொப்ப மாட்டோம். ஆகவே தேஹமிருக்கும் பொழுது சைதன்யா னுபவமேற்படினும் சரீர தர்மமாகத்தான் அது இருக்க மென்ற நியமமில்லை. வேறொன்றின் தர்மமாகவும் அது ஆகலாம் என்றேற்பட்டது.

சங்கை—ஒருவன் பிறந்தது முதல் சுகியாகவும், மற்ற வன் பிறந்தது முதல் துக்கியாகவும் இருப்பதைக் கொண்டு அவ்வித வனுபவத்திற்கு ஜன்மாந்தரீய புண்ணியபாபகர் மங்காரணமென்றும், இதனால் சரீரத்தை விட ஆத்மா வே

ருனவனென்றும் சொல்லப்பட்டது. இத்தகைய அனுபவத்தைக் கொண்டு அதைச் சுளுவில் எவ்விதம் சாதித்து விடக் கூடும். உலகில் ஒரே விதமான மண் முதலியவற்றைக் கொண்டு தயார்செய்த அனேகங்குடங்களுள் ஒருகுடத்தில் பாலும், ஒருகுடத்தில் மலமும், ஒருகுடத்தில் நெருப்பும் ஒருகுடத்தில் மத்யமும் ஊற்றப்படுகின்றது. இவ்விதம் வெவ்வேறான வஸ்துக்களுள்ளதாய் குடம் காணப்படுவதற்கு ஸ்வபாவம் காரணமேயன்றி புண்ணியபாபம் காரணமாயாவதில்லை. இதுபோலவே மஹாபூதங்களா லுண்டான சரீரமானது ஒரேமாதிரியாகவுள்ளது தானுயினும், ஒன்று விசேஷசுகத்தையும், மற்றொன்று விசேஷதுக்கத்தையும் அனுபவிப்பதற்கு ஸ்வபாவம் (இயற்கை) காரணமே யின்றி ஜன்மாந்தரீய புண்ணியபாவத்தைக் காரணமாக ஏன் கொள்ளவேண்டும் எனின் ?

உத்தரம்—அதனுண்மை பின்வருமாறு—உலகில் ஒரே விதமான காரணத்தினின்று முண்டான காரியங்கள் யாவும் காரணத்திற் கொப்பானவைகளாகவும், ஒன்றுக் கொன்று சமமான தர்மமுள்ளவைகளாகவுமே தான் காணக்கிடக்கின்றன. அதாவது: ஒருவிளக்கினின்றும் ஏற்றப்பட்டவைகளும், ஒரே விதமான, திரி, எண்ணை இவைகளுள்ளவைகளுமான, விளக்குகள் காரணத்திற்கு ஒப்பான சூடு, பிரகாசமுள்ளவைகளா யிருப்பதுடன், அவைகள் ஒன்றுக் கொன்று ஒரே விதமான சூடு, பிரகாச முடையவைகளாகவுமே தான் காணக்கிடக்கின்றன. இதுபோலவே ஒரேவிதையினின்றும் முளைத்து மரமாகிக் காய்த்துப் பிறகு பழுத்து பழத்தினின்றும் திரும்பவும் எடுக்கப்படும் விதைகளும்

காரணமான விதைக்கொப்பானவைகளாகவே காணப்படுவதுடன் இவைகள் ஒன்றுக் கொன்று ஒரேவிதமான ஸ்வரூப ஸ்வபாவ முள்ளவைகளாகவுமே தான் காணக்கிடக்கின்றன. ஆகவே ஒரே விதமாயுள்ள காரணத்தினின்றுமுண்டாகும் காரியங்களில் எவ்வித மாறுதலுமிருப்பதற்கிடமில்லை, இவ்விதமிருக்க மஹாபூதங்களாகிற ஒரேவிதமான காரணத்தினின்று முண்டான சரீரங்களுள் ஒன்று ஆதிமுதல் சுகியாகவும், மற்றொன்று ஆதிமுதல் துக்கியாகவும் இருப்பதற்கு எவ்வித நியாயமுமில்லை. ஆகவே இவ்வித மாறுதலுக்கு வேறு ஜன்மங்களிற் செய்த புண்ணியபாபத்தைத் தான் காரணமாகச் சொல்லவேண்டி வருகிறது. ஆனுல் ஒரேவிதமான குடங்களுள் பற்பல விதமான வஸ்துக்களடங்கியிருப்பதற்கு, அக்குடங்களை யனுபவிக்கும் ஸ்வாமியான ஜீவனுடைய புண்ணியபாபம் காரணமாகவே அந்த ஒரேவிதமான குடங்களில்பலதறப்பட்ட சாமான்கள் நிறப்பப்பட்டிருப்பதாக ஒப்பவேண்டி வருகின்றது. ஆகவே முற்கூறிய சுக துக்கவைஷம்மியமானது ஜன்மாந்தரத்திற் செய்த புண்ணியபாப கர்மங்காரணமாகவே தானுண்டாகின்றதென்று தான் நீயும் ஒப்பவேண்டி வருகின்றது. ஆகவே இவ்விதம் வைஷம்மியகாரணமாகக் கர்மாவை யொப்புவதிலிருந்து முற்பிறப்பையும், சரீரத்தைவிட ஆத்மாவேருக யிருக்கின்ருன் என்பதையும், நீ ஒப்பினவனுகவே தானுகிருய். இம்முறைப்படி பார்க்கும் பொழுது ஆத்மாவானவன் அனுதியென்றே தான் ஏற்பட்டு விடுகின்றது. மேலும் அனுதி சித்தமான சாஸ்திரங்கள் சரீரத்தை விட வேருக ஆத்மா ஒருவனிருக்கிருன் என்று உபதேசிப்பதி

விருந்து சாஸ்திரங்களை நம்பின ஆஸ்திகனுக்கு அது விஷயமாய் எவ்வித சந்தேஹமு முண்டாவதற் கிடமில்லை.

'நான் பெருத்திருக்கிறேன் இளைத்திருக்கிறேன், கருத்திருக்கிறேன், அறிவுள்ளவனாக யிருக்கிறேன்' எனக்கண் கூடாகக்கண்டபெருமை, கருப்பு அறிவு, முதலிய தேஹதர்மங்கள் ஆத்மாவினிடத்தில் இருப்பதாய்த் தோற்றுவதிலிருந்து சரீரமே ஆத்மா என முன்னர் கூறப்பட்டது. அவ்விஷயமாக இனி கூறுவாம். இரும்பை அக்னியிலிட்டுப் பழுக்கக் காய்ச்சினவுடன் 'இரும்பு சூடுள்ளது' என்றும் 'நெருப்பு மிக்கக் கனமுள்ளது' என்றும் சொல்லுகின்றோம். இவ்வித வியவஹாரத்தைக் கவனிக்குங்கால் நெருப்புக்கும், இரும்புக்கும் தாதாத்மிய (இணைபிரியாத) சம்பந்தமிருப்பதால், இரும்பிலுள்ள கனத்தை நெருப்பிலும் நெருப்பி லுள்ள சூட்டை இரும்பிலும் கற்பித்து வியவஹாரமானது ஏற்படுகிறது. இவ்விதமே நான் என்ற ஆத்மாவுக்கும், பெருத்தல், இளைத்தல், கருப்பு, முதலிய தர்மமுள்ள சரீரத்திற்கும் வெகு ஜன்மப் பழக்கத்தால் நேர்ந்த இணைபிரியாச சம்பந்தங் காரணமாய் சரீரதர்மத்தை ஆத்மாவிலும் ஆத்மஸ்வரூப பூதமான சைதன்னியம், சுகம் முதலியவற்றை அனாத்மாவான சரீரத்திலும் கற்பித்து பிரமங்காரணமாய் தப்பான தோற்ற முண்டாகின்றதே யொழிய உண்மையன்று. மேலும், ஜாக்கிரத் தேஹாபிமானமேயில்லாத ஸ்வப்பின காலத்திலும் ஸ்வப்பின வாஸனையே இல்லாத ஜாக்கிரத் காலத்திலும் ஜாக்கிரத் ஸ்வப்பினதேஹங்கள் மாறின போதிலும், நான் என்ற அனுபவமானது ஒரேவிதமாகவே யிருந்துவருவதைக் கொண்டும், தமது

தபோபலத்தால் தமக்கு இதுவரை நேர்ந்த பிறவி இன்னின்னவை யென்றறிந்த யோகிகளின் ஆத்மானுபவத்தைக் கொண்டும், பூதம் பிசாசம் முதலிய வேறுஜீவன் சரீரத்திலாவேசித்தகாலத்தில் அதன் மூலமுளறி அது நீங்கினதும் தான் இன்னது பேசினேன் என்ற நினைவே யில்லாதிருப்பதைக் கொண்டும், இந்தச் சரீரத்திலேறின பிசாசாதி ஜீவனுக்கு இதேசரீரமூலம் போகம், வியவஹாரம் முதலியன நடப்பதைக் கொண்டும், சரீரத்தை விட வேருகவே ஆத்மா ஒருவனிருக்கிருன் என்றுதான் திருடமாயேற்படுகின்றது. இதுவரை கூறியதிலிருந்து சரீரத்தை விட ஆத்மாதனியா யிருப்பதுடன், முன் ஜன்மமிருந்தது போலவே புண்ணிய பாபகர்மங்காரணமாய் மறுபிறப்பு மவனுக் குண்டாகின்றதென்றும், ஏற்பட்டு விட்டது.

இத்தகைய ஆத்மாவை நாம் ஒப்பின போதிலும் அவன் வேறு லோகத்தை யடைவது உண்டா வென்றும், அஃதுண்மையானல் அதை அடையும் விதம் எப்படி யென்றும், இவனடையும் லோகம் எங்கெந்த விதமாயுள்ளதென்றும் தெரிந்து கொள்ளுதலவசியமானது பற்றி அவ்விஷயமாக நமது ஆரியசாஸ்திரங்களிற் சொல்லிய வற்றை இனி எழுதுகிரும்.

லோகாந்தரம்.

பொதுவாய் இந்தச் சரீரமானது தோல், ரக்தம், மாம்ஸம், நரம்பு, எலும்பு, மலம், மூத்திரம் ஆகிய இந்த ஆபாஸமான வஸ்துக்களின் சேர்க்கையாலேயே உண்டாயிருக்கின்றதென்பது யாவருமறிந்த விஷயமே. கண் முதலியவற்ருலறியப்படும் முற்கூறிய தோல், ரக்தம் முதலியவற்

றின் கூட்டத்தை ஸ்தூல சரீரமென்கிறோம். ஆயினும் இந்தச் சரீரத்தில் கண்முதலியவற்றா லறியப்படும் தோல் முதலியவற்றிற்கு அன்னியமாயுள்ளதை நாம் கண்கூடாகக் காணாவிடினும் அதனதன் காரியத்தினின்றும் அவைகளும் சரீரத்திலிருக்கின்றன வென்பதை அவசிய மொப்பவேண்டிய வர்களாகின்றோம்.

ஞானேந்திரிய நிரூபணம்.

அதாவது: கண், காது, மூக்கு, நாக்கு, தோல் என்ற ஐம்புலன்களும் இதிலிருப்பினும், அவைகளை நாம்நேரில் காண்பதில்லை. அவ்விதம் காணாவிடினும் ரூபம், சப்தம், மணம், ருசி, தொடுகை முதலிய வெவ்வேறான அனுபவ முண்டாவதைக் கொண்டு இவ்வித வனுபவத்திற்குக் காரணங்களான முற்கூறிய ஐம்புலன்களு மிருக்கின்றன வென்றே நிர்ணயஞ் செய்யவேண்டி வருகின்றது. அதாவது: கருப்பு, வெளுப்பு, சிவப்பு, முதலிய வெளியிலுள்ள ரூபங்களைப்பற்றிய அறிவானது கண்ணிருந்தாலுண்டாகின்றது, கண்ணில்லாவிடி லுண்டாவதில்லை யாதல்பற்றி ரூபக்ஞானத்திற்குக் காரணமான சக்ஷுஸ் (கண்) என்ற இந்திரியமிருப்பதாக வெண்ணுகின்றோம். இவ்விதம் வெளியிலுள்ள, நல்ல சப்தம் முதலியவற்றை காது என்ற சுரோத்திரேந்திரிய மிருந்தால் அறிகிறோம். சுரோத்திரேந்திரிய மில்லாவிடி லறிவதில்லை. ஆதலால் சப்தத்தைப் பற்றிய அறிவை யுண்டாக்க கூடிய சுரோத்திரேந்திரிய மானது சரீரத்தி லிருப்பதாகவே தான் எண்ணுகிறோம். இதுபோலவே ருசியைப்பற்றிய அறிவுண்டாவதைக் கொண்டு ஜிஹ்வா (நாக்கு) என்ற இந்திரியத்தையும், தொடுகையைப் பற்றியுண்டாகு மறிவைக்

கொண்டு த்வக் (தோல்) என்ற இந்திரியத்தையும், மனத்தைப் பற்றியுண்டாகும் அறிவினின்றும், கிராணம் (மூக்கு) என்ற இந்திரியத்தையும் சரீரத்தி லிருப்பவைகளாகவே எண்ணுகிறோம். இதினின்றும் ஐம்புலன்களின் ஸ்வரூபத்தை ஸ்தூலசரீரத்தைப் போலவே நேரில் கண்கூடாகக் காணுவிடினும் அதனதன் முற்கூறிய காரியத்தினின்றும் அத்தகைய காரியத்திற்குக் காரணமான ஐம்புலன்களும் சரீரத்திலிருக்கின்றன வென்பதை யொப்ப வேண்டுவது அவசியமாகி விடுகின்றது.

கர்மேந்திரிய நிரூபணம்.

மேலும் சரீரத்தில், பேசுதல், எடுத்தல், நடத்தல், வெளிவிடுதல், ஆனந்தித்தல் ஆகிய ஐந்து காரியங்கள் நடைபெறுகின்றன. இக்காரியம் நடைபெறுவதற்குப் போதிய ஐந்து காரணங்கள் வேண்டுவதவசிய மாகின்றது. வாக், பாணி. பாதம், பாயு, உபஸ்தம் என்ற இவ்வைந்து இந்திரியங்களே மேற்கூறிய ஐந்து காரணங்களாகின்றன. அதாவது: ஒரு குளத்தில் நிறைந்துள்ள ஜலத்தை அக்குளத்தினின்றும் மற்றுமோர் குளத்திற்போய்ச் சேரும்படி செய்ய வேண்டுமானுல் ஒருபாய்கால் வேண்டிவருவது போலவே, நமது மனதாகிற குளத்தில் நிறைந்துள்ள அபிப்பிராயங்களாகிற ஜலத்தைப் பிறர் மனதாகிற குளத்திற் போய் சேரும்படி செய்வதற்கு வேண்டி வாகிந்திரியம் என்ற பாய்காலே ஆண்டவன் கொடுத்திருக்கிறுர். ஆகவே ஒருவர் மனத்திலுள்ள எண்ணத்தை மற்றொருவர் மனத்திற் கொண்டு சேர்த்தல் என்ற கர்மத்தை இந்த வாகிந்திரியம் செய்வதால் இது கர்மேந்திரியம் என்ற பெயரையடைகின்றது. இதுபோ

லவே, ஒரு விடத்திலுள்ள வஸ்துவை அங்கிருந்து பெயர்த்தெடுத்தல் என்ற கர்மமானது பாணி என்ற இந்திரியத்தால் நடைபெறுவதால் இந்தப் பாணி என்ற இந்திரியமும் கர்மேந்திரியமாகவே யாகின்றது. ஓரிடம் விட்டு மற்றோரிடஞ் செல்லல் என்ற கர்மமானது பாதம் என்ற இந்திரியத்தாலும், சரீரத்திலுள்ள மல மூத்திராதிகளை வெளிப்போக்குதல் என்ற கர்மமானது பாயு என்ற இந்திரியத்தாலும், ஆனந்தித்தல் என்ற கர்மமானது உபஸ்தம் (ஆண், பெண் குறி) என்ற இந்திரியத்தாலும் நடைபெறுவதாலும், பாதம், பாயு, உபஸ்தம், என்ற இவைகளும் கர்மேந்திரியங்களென்றே சொல்லப்படுகின்றன. இவ்விதம் அனுபவத்தைக்கொண்டு த்வக், சக்ஷுஸ், ச்ரோத்ரம், ஜிஹ்வா, க்ராணம், என்ற க்ஞானேந்திரியங்கள் ஐந்தும், வாக், பாணி, பாதம், பாயு, உபஸ்தம், என்ன கர்மேந்திரியங்கள் ஐந்தும் அதனதன் தொழிலைக் கொண்டு ஊஹித்தறிய வேண்டுவனவாய் இச்சரீரத்தி லிருக்கின்றன வென்றே ஏற்பட்டது.

பஞ்சப்பிராண நிரூபணம்.

மேலும், சரீரத்திற் குள்ளினின்று வெளியிலும், வெளியினின்று உள்ளிலும் ஒரே விதமான வாயு சஞ்சரிக்கின்றதாக ஸ்தூலமாக நமதறிவுக்குப் புலப்படுகின்ற தாயினும், இவ்வாயுவால் ஐந்து விதமான காரியங்கள் நடைபெறுவதால் அக்காரியங்களை யொட்டி இந்த வாயுவும் ஐந்து விதமான பிரிவை யுடையன வாகின்றன. அதாவது: சரீரத்திற்குள்ளிருக்கும் ஸ்தூலமான அழுக்கு முதலியவற்றை அவ்வப்பொழுது எது வெளிக்கொணர்ந்து தள்ளுகின்றதோ அந்த வாயு, பிராணன் என்று சொல்லப்படும். இக்

காரணம் பற்றியே ஒருவன் மீது மற்றொருவன் மூச்சுவிடுவது கூடாதெனப் பெரியோர் கூறுகின்றனர். மேலும் வெளியிலுள்ள மணம் முதலியவற்றை உள்ளிழுத்தல் எதனு லேற்படுகின்றதோ அது அபானன் என்றும், எது ரக்தத்தைச் சரீரம்முழுதும் பரவும்படி செய்கின்றதோ அது வியானன் என்றும், எது உந்தி முதல் மார்வரை யுள்ளவிடத்திலிருந்து கொண்டு சரீரத்தை உயரக்கிளப்பும் விஷயத்தில் உதவி புரிகின்றதோ அது உதானம் என்றும், எது உட்கொள்ளப்பட்ட கறி, காய், அன்னம் முதலிய உணவு பொருள்களை ரக்தமாக்குகின்றதோ அது ஸமானன், என்றும் ஒரே விதமான வாயு தொழிலைக் கொண்டு ஐந்து விதமான பிரிவையும் அடைந்திருக்கின்றது. இதுவரை கூறியதிலிருந்து, ஸ்தூல சரீரத்திற்கு அன்னியமாய் ஞானேந்திரியம் ஐந்தும், கர்மேந்திரியம் ஐந்தும், பிராணன் ஐந்தும், ஆக 15 பதார்த்தங்கள் நமது ஒவ்வொரு சரீரத்திலு மிருப்பதாக ஏற்பட்டது.

மனோ நிரூபணம்.

இதுவரை கூறிய இப்பதினைந்தும் தத்தமது தொழிலைச் செய்ய வேண்டுமானல் இப்பதினைந்திற்கும் பொதுவானதாயும் உண்மையில் இப்பதினைந்தையும் விட வேறனதாயும் உள்ள வேறு ஏதோ ஒருவஸ்து சரீரத்திலிருப்பதாக நமக்குப் பலசமயங்களி லேற்படும் அனுபவத்தினின்றும் நிச்சயமா யேற்படுகின்றது. அவ்வனுபவ மாவது:—ஒரு சமயம் கண், காது முதலிய எந்த வஸ்துக்களிலும் எவ்வித குற்றமு மில்லாத நண்பனை ஒருமனிதனிடம் நாம் போகும் பொழுது அம்மனிதன் நாம் வந்ததைக் கவனியாமலும்,

பாருமலும், பேசாமலும் இருந்து விடுகின்றான் என்று வைத்துக்கொள்வோம். உடனேநாம்கோபங்கொண்டுநம்மை இவன் கொஞ்சமும் பொருட்படுத்தினு னில்லையே! இஃ தென்ன அன்னியாயம், என வெண்ணி மறுநாள் அந்நண் பனை நேரில் காணுங்கால் முதல் நாள் நடந்ததை அவனிடம் தெரிவிக்கவே, அதற்கந்த நண்பன் 'அந்தோ! தோழா! நீ வந்ததைக் கவனித்திருந்தால் நான் இன்று நடந்தது போல நேற்றும் ஏன் நடக்கக்கூடாது, கட்டாயம் நடந்தே யிருப்பேன். நேற்று நீ வந்ததாகச் சொல்லும் சமயம் என் மனது வேறு எதெதையோ பற்றி எண்ணிக் கொண்டிருந்தி ருக்கவேண்டும். அவ்விதமில்லாவிடில் நீ எதிரில் வந்து நின்ற தாய்ச் சொல்லும்பொழுது நானுன்னைப் ப்ராமலிருப்ப தற்கு எவ்வித நியாயமுமில்லை' என்கிறான். அது கேட்ட தும் நாமும் திருப்தி யடைந்து விடுகிறோம். இவ்வனுபவத் தைச் சற்றுக் கவனித்தால், கண் காது முதலிய அறிவு புலன்களுக்கு அன்னியமாய் மனதென்ற ஒரு பொருள் சரீ ரத்திலிருக்கின்ற தென்றும் அந்தமனதினுதவியைக் கொண் டே கண் காது முதலிய ஞானேந்திரியங்கள் தத்தமது தொழில்களை வழுவாது செய்கின்றன வென்றும் நன்கு புலப்படக்கூடும். இதுபோலவே நமக்குப் பிடித்தமில்லாத வொருவன் யாதேனுமொரு பதார்த்தத்தைக் கொடுக்குங் கால் நாமதை யெடுக்க மறுக்கிறோம். இந்த விடத்தில், நமக்கு அப்பதார்த்தத்தை எடுக்க மனமில்லாததா லன்றோ எடுக்காம லிருக்கின்றோம். இதிலிருந்தும் பாணி முதலிய கர்மேந்திரியங்களும் மனதின் சேர்க்கையை யடைந்தாலல் லாது எவ்வித வேலையையும் செய்வதில்லை யென்பது நன்கு

விளங்கும். இதுபோலவே சரீரத்திலோடும் பிராணன் முதலிய வற்றையும் தன் முயற்சியால் சில காலமாவது நாம் அடக்கி விடுகிறோம். யோகாப்பியாஸம் செய்பவர் நிச்சயமாய் வாயுவை யடக்கியே விடுகின்றனர். இதைக் கொண்டும் சரீரத்திலுள்ள மனதே, கர்மேந்திரியம், க்ஞானேந்திரியம், பிராணன் முதலிய முற்கூறிய 15 பதார்த்தங்களுக்கும் மேலான தென்றும், மனத்தின் சேர்க்கையை யடைந்தே மற்றெல்லா இந்திரியங்களும் தத்தமது தொழிலைச் செய்கின்றன வென்றும் நன்கு விளங்கி விடுகின்றது. ஆகவே முற்கூறிய 15 பதார்த்தங்களும், அவற்றிற்குத் தலைமை வகித்து நடத்தும் மனம் என்ற வஸ்துவும், இந்த ஸ்தூலதேஹத்திற் கன்னியமாய் நமது சரீரத்திலிருப்பதாகவே யேற்படுகின்றது. இதுவரை கூறியபடி சதை, ரக்தம் மாம்ஸம் முதலிய ஸ்தூலவஸ்துக்களா லமைந்ததை ஸ்தூல சரீரமென்றும், கர்மேந்திரியங்கள் 5, க்ஞானேந்திரியங்கள் 5, பிராணன் 5, மனது 1 ஆகிய இந்த 16ஐயும் ஸூக்ஷ்மசரீரங்களென்றும் சாஸ்திரங்க ளுபதேசிக்கின்றன.

மனதைவிட ஜீவனொருவனுண்டென்ற நிரூபணம்.

முற்கூறிய ஸூக்ஷ்ம சரீரமானது ஸ்தூல சரீரத்துடன் கலந்து சரீரத்தைவிட வெளியிலுள்ள சப்தம் முதலிய விஷயங்களை யனுபவிக்கின்றது. இவ்வித விஷயானுபவமேற்படும் பொழுது சிற்சில சமயங்களில் நமது மனதிற்குக் குழப்பமுண்டாகின்றது. அப்பொழுது ஒன்றுமே தோன்றுதவர்களாய் ஒரு மூலையில் படுக்கவாரம்பம் செய்கிறோம். அச்சமயம் நமது ஆப்த நண்பரொருவர் அருகில் வந்து "என் இவ்விதம் வாடின முகத்துடனும், இளைத்த சரீரத்

துடனும் காணப்படுகின்றீர்? இவ்விதம் ஒருநாளும் தாங்க ளிருந்ததில்லையே" என்று கேட்கிறார் என்று வைத்துக் கொள்வோம், அவ்விதம் கேட்ட நண்பரை நோக்கி "ஓ நண் பரே? இதன் காரணத்தை என்னென்று சொல்வது? கொஞ்சநாளாய் எனது மனம் நானறியாமல் கலங்குகின் றது. எப்பாடு பட்டும் அது தெளியாததால் ஒன்றுமே தோன்றாமல் தபிக்கிறேன்" என்கிறோம். இவ்விடத்தில் சற்று கவனிப்போம் "என்னுடைய மனமானது கலங்கி யிருக்கின்றது" என்ற இவன் வார்த்தையி லிருந்து மனத் தின் கலக்கத்தை நன்குணர்ந்தவனும், உண்மையில் மனதை விட வேறானவனுமான நான் என்ற ஒருவன் இருப்பதை ஜாக்கிரத் காலத்தில் எவனும் தெளிவாய் தெரிந்து கொண் டிருப்பது விளங்குகின்றதன்றோ?

மனத்தைவிடத் தனியாய் ஜீவாத்மாவை யொப்பும் விஷயத்தி லாக்ஷேபம்.

சங்கை—என்னுடைய மனது என்ற விடத்தில் வேண் டுமானால் மனதைவிட வேறாக ஜீவனிருப்பதாக நீங்கள் சொல்லக்கூடும். 'நானே நினைக்கிறேன், நானே பேசுகி றேன், நானே பார்க்கிறேன்' என்றும் சில சமயங்களில் எவ்வளவு விவேகியும் பேசுகின்றான். இதைக் கவனித் தால் முன் சொன்ன அனுபவத்தைக் கொண்டு மட்டும் மனதை விட ஆத்மா தனியாயிருப்பதாக எவ்விதம் உறுதி கூறமுடியும் எனின்?

அனாதியான அத்யாசத்தாலேயே ஜீவன், மனம் முதலிய வற்றுடன் சேர்ந்தவனாகத் தோன்றுகிறான் என்பது.

உத்தரம்—இரும்பை நெருப்பி லிட்டுப் பழுக்கக்காய்ச்

சினதும் இரும்புக்கும் நெருப்புக்கும், தாதாத்மிய (இணை பிரியாத) சம்பந்த மேற்படுவதன் மூலம் இரும்பு சுடுகின்றதென்றும், நெருப்பு மிக்கக்கன முள்ளதென்றும் எவ்வளவு விவேகியும் எண்ணுகிறான். ஆயினும், சூடு நெருப்பையும், கனம் இரும்பையும் சேர்ந்ததாக வல்லவோ உண்மை யறிந்த நாம் எண்ணவேண்டும். அது போலவே, சுத்தசைதன்னிய வடிவனுயிருக்கும் ஆத்மாவுக்கும், இரும்பு போல அசேதனமான மனம் முதலியவற்றிற்கும் வெகு ஜன்மப் பழக்கங் காரணமாயுண்டான அவிவேகத்தால் சில சமயங்களில் மனதையும் ஆத்மாவையும் ஒன்றாகவே எண்ணினபோதிலும், சிலசமயங்களில் அதனுண்மையான அனுபவமும் உண்டாகக் கூடுமாதலாற்றான் என்னுடைய மனது என்றதால் மனத்தைவிட ஆத்மா வேறு என்ற தோற்றமானது இவனறியாமலே யேற்படுகின்றது என்பது வெளியாகின்றது.

ஆத்மா ஸ்வப்பிரகாசனேன்பது.

மேலும், மனத்தை விட்டுத்தனியாய் ஆத்மானுபவமில்லாமலும், எப்பொழுதும், மனம் ஆத்மா ஆகிய இவ்விரண்டும் சேர்ந்தே யனுபவிக்கப்பட்டும் வந்தாலல்லவோ, மனத்தைவிட வேறாக ஆத்மா வொருவன் இல்லை யென்று வாதாடக் கூடும். மனத்தின் சம்பந்த மில்லாமலே ஆத்மா பிரகாசித்துக் கொண்டே தானிருக்கின்றான் என்பதை எவரும் தத்தமது அனுபவத்தைக் கொண்டு ஒப்பியே தீர வேண்டும். அதாவது: உலகில் பிரகாசகம், (ஒளியைத் தரக்கூடியது) என்றும், பிரகாச்யம் (ஒளியை யடையக் கூடியது) என்றும் ஒன்றுக் கொன்று நேர்மாறான வுருவ

முள்ள இரண்டு விதமான வஸ்துக்களை நாம் அனுபவிக்கின்றோம். பகலில் சூரியன் பிரகாசகனாகவும், குடம் முதலியன பிரகாச்யங்களாகவும் நம்மால் அனுபவிக்கப் படுகின்றன. இவ்விடத்தில் பிரகாசகனான சூரியனையும், பிரகாசியமான குடம் முதலிய வற்றையும் ஒன்றுதானென எவரேனும் சொல்ல முன்வருவாரா? ஒருபொழுதும் வரார், இவ்விதமே கதிரவன் மறைந்ததும், இருள் வந்து சூழ்ந்து குடம் முதலியவற்றை அது மறைக்கும் பொழுது, வானத்தில் பூர்ணசந்திர னுதயமாகி இருளைப் போக்கி நாம் கோரிய வஸ்துக்களைப் பிரகாசப் படுத்துகிறான். இங்கும் பிரகாசகனான சந்திரனும் அவனால் பிரகாசப்படுத்தப்படும் வஸ்துவும் வேறென்று கொள்வதில் யாதும் தடையில்லை. சந்திரனுமில்லாத கிருஷ்ணபக்ஷத்திரவில் தனது கைதவறி கீழே விழுந்த மோதிரத்தைக் காணமற்றவிக்கும் பொழுது, ஒரு விளக்கைக் கொண்டுவந்து அதை யெடுத்து விடுகிறான். ஆகவே சூரியனும், சந்திரனும் இல்லாதவிடத்தில் நெருப்பு வஸ்துப் பிரகாசகமாக வாகின்றதை அனுபவத்திற் காண்கிறோம். சூரியனோ, சந்திரனோ, நெருப்போ ஒன்றுமேயில்லாதவிடத்தில் அக்கினியின் அம்சமான சப்தமானது வஸ்துப் பிரகாசமாயிருப்பதைக் காண்கிறோம்.

அதாவது: ஒரு மனிதன் சமீபத்திலுள்ள கிராமத்தில் நடக்கும் தனது பந்துவின் கல்யாணத்தைக் குறித்து ஊரினின்றும் கிளம்பி கால்நடையாகவே நடந்து இடையிலுள்ள சுவல்பக் காட்டைக் கடந்து வரும்வழியில் சூரியனும் மறைந்து, திடீரென வானங்கறுத்து ஒரே இருள் சூழ்ந்து மழைபொழிய வாரம்பித்தது. அம்மழையி லடி-

பட்ட இப்புருஷன், திக்பிரமம் பிடித்து ஒன்றுந் தோன்று தவனுய் இன்று இவ்விரவை எப்படித் தாண்டப் போகிறோம்; எவ்வழி செல்வது, நாமிப்பொழுது எந்த விடத்திலிருக்கிறோம், எனப் பலவாறாக வெண்ணியும் ஒன்றுமே தோன்றாதவனுய், அக்காட்டிலேயே அங்குமிங்கும் சுழண்டு கொண்டு வரும்பொழுது, நள்ளிரவில் ஒரு நாய் குறைப்பதைக் கேட்டான். அதை மனத்தாற் சிந்தித்தான். ஓகோ? இந்தநாய் நமது பந்துவின் நாயன்றோ? இது இங்கு குறைப்பதின் காரணமென்ன? வென்று எண்ணினுன். திரும்பவும் நாயின்குறல் காதில்விழவே, அக்குறல் வந்த திக்கை நோக்கியே கனமான மழையில் நனைந்து உடம்பெல்லாம் நடுக்கெடுத்து மெள்ள மெள்ள வரவே, அது தனது பந்துவின் கல்லியாணத்திற்காக இறங்கி யிருக்கும் வீட்டின் பழக்கடையாக விருப்பதை யறிந்து உடனே உட்சென்று தனது கடமையை முடித்தான். என்ற விடத்தைக் கவனிப்போம். சூரியன், சந்திரன், நெருப்பு இவைகள் வஸ்துப்பிரகாசகமாக விருப்பது போலவே சப்தமும் வஸ்துப்பிரகாசகமாகவே தான் ஆகின்றது என்பது தெளிவாகின்றது. இங்கும் பிரகாசகமான சப்தத்தைவிட பிரகாச்யமான பந்துவின் வீடு வேறென்பதை மறக்க வேண்டாம்.

ஸ்வப்பினத்தில் ஆத்மாவின் ஸ்வரூபமே பிரகாசகமாகின்றதென்பது.

இவ்விதம் வீடுவந்த இவன் வழிநடந்த களைப்பினுலும் பசியினுலும் வாடி ஓரிடத்தில் படுத்தான். ராவணனுடைய ஸஹோதரன் போல தூங்கவாரம்பித்தான். இங்கு கவ

னிப்போம். அங்கு தூங்கவாரம்பித்த இவன் பகலிற் கண்ட சூரியனையோ, இரவில் கேட்ட நாயின் சப்தம் முதலியவற்றையோ ஒன்றையுமே காணாது தூங்கும் பொழுது இவனது சரீரத்திலுள்ள முற்கூறிய கர்மேந்திரிய க்ஞானேந்திரியங்கள் யாவுமே தனது வேலையைச் செய்யாது, மனத்திலொடுங்கி கேவம் மனோமாத்திரனாகவே அப்பொழு திருக்கிறான். ஆயினும் விழித்துக் கொண்டிருக்கும் காலத்தில் தானனுபவித்தது போலவே தூங்கும் பொழுதும், தான் மலையிலேறுவதாகவும், காசி, மதுரை, பிருந்தாவனம், அயோத்யா முதலிய பெரிய ஸ்தலங்களில் தானிருப்பதாகவும், விலையுயர்ந்ததும், மிக்க ருசியுள்ளதுமான வஸ்துக்களைத் தான் அனுபவிப்பதாகவும் ஸ்வப்பினம் காண்கின்றான். இந்த விடத்தைப்பற்றி யோசிப்போம்.

ஸ்வப்பினத்திற் காண்பதெல்லாம் புதிதான அனுபவமேயொழிய நினைவல்ல வென்பது.

ஸ்வப்பினத்தில் இவன்கண்ட காசி, பிருந்தாவனம் அயோத்தியா முதலிய விடங்களைக் குக்கிரம வாஸியான இவன் கதையிலும் கேட்டதில்லை. இவ்விதமிருந்தும் புதிதாய் ஸ்வப்பினத்தில் அவற்றை யனுபவிப்பதுடன், மற்றும் இதுபோன்ற சிலவற்றையும் ஸ்வப்பினத்தி லனுபவிப்பதுடன், தான் ஜாக்கிரத் காலத்திற் கண்டவற்றையும் ஸ்வப்பினத்திற் காண்பதுண்டு. ஆகவே இதுவரை தான் கண்டதோ, காணாததோ ஏதேனு மொன்றைச் சுவப்பினத்திற் காணும் பொழுது, ஸ்வப்பினத்திற் கண்ட அந்தந்த வஸ்துக்களைப் பிரகாசப்படுத்தக் கூடிய சூரியன், சந்திரன். நெருப்பு, சப்தம், முதலியன வொன்றுமே அங்கு அடி

யோடு இல்லாதபொழுது, சூரியாதி களினுதவியால் ஜாக்கிரத்திற் றெளிவாய்க் கண்டது போலவே ஸ்வப்பினத்திலும் காணப்படுகின்றதைக் கொண்டு ஜாக்கிரத் காலத்தில் பிரகாசப்படுத்தும் சூரியாதிகள் போலவே ஸ்வப்பினத்தில் பிரகாசப்படுத்தும் வஸ்து ஒன்று இருக்க வேண்டுவது அவசியமாகின்றதே? அவ்வஸ்து யாதென்று சொல்லுவது? ஜாக்கிரத்திற் கண்டதை மட்டுமே ஸ்வப்பினத்தி லொருவன் கண்டாலன்றோ ஜாக்கிரத் காலத்திய அனுபவமூலம் சித்தத்திலோர் ஸம்ஸ்கார மேற்பட்டு ஸ்வப்பின காலத்தில் சரீரத்திலுள்ள பித்தாதிக்யங் காரணமாய் சித்தமானது கலக்க முறவே சித்தத்திலுள்ள ஸம்ஸ்காரத் தினின்றும் முற்கூறிய வாறெல்லாம் நினை வுண்டாகின்றது என்று எண்ணக்கூடும். அவ்விதமோ சொல்லுவதற்கில்லை, ஏனெனில்?

ஸ்வப்பினத்தில் சில சமயத்தில் தனது தலையே அற்றுப் போனதாகவும், தான் காக்கையாக யிருப்பதாகவும், அனுபவிக்கிறான். ஜாக்கிரத் காலத்தில் தனது தலையற்றுப் போயிருந்த அனுபவமிருந்தா லன்றோ, அவ்வித வனுபவமூலம் சித்தத்திலேற்பட்ட ஸம்ஸ்காரத்தினின்றும் தலையற்றுப் போனதான ஜாக்கிரத்திலுள்ள அனுபவத்தை இப்பொழுது நினைக்கிறான் என்று சொல்லுவது பொருந்தும். தன் தலையே யற்றுப்போன வனுக்கு ஸ்வப்பினம் காணும் வரை உயிர் உடலில் நின்றாலல்லவா இவ்விதம் சொல்லும்வாதம் பொருந்தும். இதுபோலவே ஸ்வப்பினத்தில் தன்னைக் காக்கையாக வெண்ணுவதை என்னென்று சொல்லுவது. இவ்வனுபவத்தைச் சாதிப்பதற்கு வேண்டி ஜாக்கிரத் காலத்தில் காக்கையாக விருந்தான் என்பதைச் சொல்லவேண்டு

மல்லவா? ஆகவே ஸ்வப்பினத்திற் காணுவதெல்லாம் புதிதாகவே யில்லாமல் ஜாக்கிரத் காலத்திற் கண்டதையே தான் ஸம்ஸ்காரமூலம் நினைக்கிறான் என்று சொல்லுவது அனுபவத்தையே மறைப்பதாக வாகிவிடும்.

இதுவரை ஸ்வப்பினத்தை, ஸம்ஸ்கார மூலமேற்படும் ஸ்மிருதி (நினைவு) என்று சிலர் சொல்லுகிறபடி பார்த்தாலும் புதிதாயும் சிலவஸ்துவின் அனுபவ மேற்படுவதற்குக் காரணம் கூறமுடியாமலாகி விடுகிறது என்பதை யெழுதினோம். உண்மையாகப் பார்க்கும் பொழுது ஸ்வப்பினமானது கேவலம் அனுபவமே யொழிய, நினைவல்ல வென்பதை இனி நிரூபிப்பாம். அதாவது: ஸ்ரீரங்கம் போய் ரங்கநாதனைக் கண்ணாறக்கண்டு ஸேவித்து ஊருக்குத் திரும்பி வந்தபிறகு, ஒருசமயம் வீட்டிலிருந்தபடியே தான் ரெங்கநாதனைக் கண்டதையும், அங்கு நடந்த வைபவங்களையும் பற்றி பின்வருமாறு எண்ணுகிறான். ஆஹா? மஹா யோகியும் காணுதற்கரிதான ஸ்ரீரங்கநாதனை அன்று நான் கண்ணாறக்காணும்படி என்ன பாக்கியஞ் செய்தேனோ? என்று சொல்லிக்கொண்டே தான் கண்ட ரங்கநாதனது திருமேனியையும். அங்கு அப்பொழுது நடந்த வைபவங்களையும் நினைத்து நினைத்துப் பரமானந்தப் படுகிறான். ஆகவே புதிதாயெந்த விஷயத்தைப் பார்க்கின்றானோ அதை அனுபவ மென்றும், இவ்விதமனுபவித்ததை வேறுசமயத்தில் நினைப்பதை அனுபவத்தி னின்றுண்டான ஸம்ஸார மூல மேற்படும் ஸ்மிருதி (நினைவு) யென்றும் சொல்லுகிறோம். இதுபோலவே ஸவப்பினகாலத்தில் பார்க்கப்படும் எந்தவஸ்துவையும் தான் நினைக்கிறேன் என்று எவரும்

எண்ணுவதில்லை, "இவ்வித மனுபவிக்கிறேன்" என்று தான் ஸ்வப்பினங்காணும் எவரு மெண்ணுகின்றனர். ஆகவே ஸ்வப்பினகாலத்திற் காணப்படும் வஸ்துக்கள் யாவும் இவனது புண்ணிய பாபகர்மங்காரணமாய் அப்பொழுதுண்டாகி அவற்றி னனுபவத்தைத் தரும் புண்ணிய பாப கர்மம் முடிந்தவுடன் ஜாக்கிரத் தேஹமழிவது போலவே அழிந்து விடுகின்றன என்று தான் உறுதியாய்க் கொள்ளவேண்டி வருகின்றது.

ஸ்வப்பினத்தில் ஆத்மாஸ்வப் பிரகாசன் என்பதை நிலை நாட்டல்.

இதுவரை கூறியதிலிருந்து ஸ்வப்பினனுபவ காலத்தில் ஜாக்கிரத் காலத்திலனுபவித்த பதார்த்தங்களும் அவற்றைப் பிரகாசப்படுத்தின சூரியன் சந்திரன், விளக்கு, சப்தம் இவைகளுள் ஒன்றுமே யில்லாவிடினும் சூக்ஷ்மசரீரமான கர்மேந்திரியம், க்ஞானேந்திரியம், ப்ராணன், மனம், முதலியவற்றிர்க்கு ஜாக்கிரத்காலத்திற் போலவே தெளிவான பிரகாசமேற்படுவதைக் கொண்டு இன்னிலையில் மேற்கூறிய பதார்த்தப் பிரகாசகமாக ஆத்மா வொன்றிருக்கத் தான் வேண்டுமென்றும் பிரகாசகமான ஆத்மா இல்லையேல் பிரகாச்யமான சூக்ஷ்மசரீரத்தின் அனுபவமே யேற்படுவதற்கிட மில்லாமலாகி விடுமென்றும் ஏற்பட்டது.

மனத்தைவிட ஆத்மா தனியேன்பதற்கு இதுவறை கூறிய அனுபவம் போதாதேன்பது.

சங்கை—முன்னர் மனதின் சம்பந்தமில்லாமலே ஆத்மா தனியாய் பிரகாசிப்பது நன்கு அனுபவத்திலிருப்பதாக நிரூபணஞ் செய்யத் தொடங்கி முடிவில் ஸ்வப்பினத்தில்

மனதுடன் ஆத்மா பிரகாசிப்பதை அனுபவமூலம் நிரூபணம் செய்யப்பட்டதாகவாகுமேயொழிய மனத்தின் சம்பந்தமில்லாமல் ஆத்மாபிரகாசிப்பதை அனுபவமூலம் நிரூபணஞ் செய்ததாக மேற்கூறிய அனுபவத்தினின்றும் ஒருபொழுதுமாவதற்கிட மேற்படவில்லையே எனின் ?

ஸுஷுப்தி யனுபவத்தைக் கொண்டு ஆத்மாஸ்வப்பிரகாசந் தானேன்பதை நிரூபித்தல்.

உத்தரம் — அதையும் நிரூபிப்பாம். முற்கூறியவாறெல்லாம் ஸ்வப்பினம் கண்டதும் அவ்விதஸ்வப்பினனுபவமோன்றுமே யில்லாமல் நன்றாய்த் தூங்கிவிடும் பொழுதுள்ள நிலையைக் கவனிப்போம், இன்னிலையே சாஸ்திரங்களில் ஸுஷுப்தி எனக் கூறப்பட்டிருக்கின்றது. இனி இதை ஸுஷுப்தியென்ற சப்தத்தாலேயே வியவஹரிப்போம் அதாவது: ஸுஷுப்தி நிலையில் மனம் முதலிய பதார்த்தங்களின் தோற்றமே இல்லாமலாகி விடுகின்றது. இவ்விதம் மனம் முதலியவற்றின் தோற்றமில்லாமல் தனியாய் பிரகாசிக்கும் ஆத்மாவை சாஸ்திரங்கள் "ப்ராக்ஞன்" என்ற பதத்தாலழைக்கின்றன. நாமும் அவ்விதமே பேசுவோம். இந்த ப்ராக்ஞனனவன் ஸுஷுப்தி காலத்தில் தனது ஸ்வரூபத்திற்கு ஆவரணத்தை (மறைவை) த்தரும் அக்ஞானத்தைப் பிரகாசப்படுத்திக்கொண்டு மனத்தின் சம்பந்தமில்லாமலே தனித்திருந்தான் என்பது விழித்தெழுந்த பிறகுண்டாகும் "சுகமாய்த் தூங்கினேன், ஒன்றையுமறிந்தேனில்லை" என்ற ஸ்மிருதியினின்றும் தெளிவாகின்றது. அதாவது: எதையெவன் அனுபவிக்கின்றானோ அதையே பிறகு நினைவிற்குத் தடையொன்றுமில்லாவிடில் நினைக்

கிருன், என்பதை நாம் வெகு சமயங்களில் கண்டிருப்ப தால், ஸ்வப்பினனுபவத்திலிருந்த மனம் முதலிய சூக்ஷ்ம பதார்த்தானுபவ மானது ஸுஷுப்தி காலத்திலுமிருந் திருக்குமானல் அவ்விஷயமாகவும் ஏன் இவனுக்கு நினைவு வரக்கூடாது? ஆனல் ஜாக்கிரத் காலத்தில் வரும் நினை வானது "நான் ஒன்றுமறியாமல் சுகமாய் தூங்கினேன்" என்று மட்டும் தான் உண்டாகின்றது ஆகவே ஸுஷுப் தி காலத்தில் மனம் முதலிய பதார்த்தங்க ளில்லாத பொழு தும் ஆத்மா தனியாய் பிரகாசித்துக் கொண்டிருப்பதால் ஆத்மா ஸ்வப்பிரகாசகனுகவே தான் ஆகிவிடுகிருன். இவ் விதமே பிருஹதாரண்ணியகம் முதலிய உபனிடதங்களும், **न हिद्रष्टुर्दृष्टेर्विपरिलोपो विद्यते, अविनाशित्वात्, अविनाशी वा अरे अयमात्मा अनुच्छित्तिधर्मा,** என்றதால் தெளிவாயுபதேசித் திருப்பதுடன், மஹான்களு மிவ்விதமே

संशान्ते रविशशिवन्हिवाक्प्रकाशे निर्वाणे करणगणे निरस्तसंगः । स्वज्योतिः प्रकटितवासनामयार्थः चिद्धातुश्श्रुतिभिरुदीरितोऽन्तरात्मा ॥

என்றதால் ஆத்மா ஸுஷுப்தி காலத்தில் மனம் முத லியவற்றின் சம்பந்தமற்றவனுய் ஸ்வப்பிரகாசகனுகவே பிர காசிக்கிருன் எனத் தெளிவாயுபதேசித்து மிருக்கின்றனர். ஆகவே இத்தகைய ஸ்வப்பினனுபவத்தைக் கொண்டு பார்க்குமிடத்து, ஜீவனுக்கு வேறு லோகமும், வேறு சரீர மும் அவசிய முண்டென்பது நன்கு விளங்கும். அதாவது: ஜாக்கிரத் காலத்தில் இந்த ஸ்தூல சரீரத்தில் கண், காது முதலிய 10, இந்திரியங்களேயும் எல்லாவற்றிற்கும் மேலான மனதையும்அதததற்கேற்பட்டகோளங்களில்(ஸ்தானங்களில்) இருத்தி கொண்டு சரீரத்திற்கு வெளியிலும் தனது சரீரத்

திலு முள்ளவஸ்துக்களை நன்றாய் அனுபவித்தது போலவே ஸ்வப்பினகாலத்திலும், ஸ்தூல சரீரத்தின் தொற்றமே யில்லாமல் முற்கூறியபடி சூக்ஷ்மமான சரீரத்தை யடைந்து அதனுதவியால் அப்பொழுது இவனது புண்ணிய பாபகர்மத்தினுதவிபெற்ற அவித்யா மூலம் அந்த க்ஷணமாத்திரமிருக்கக்கூடிய தாகப் படைக் கப்படும் வஸ்துக்களை இவன் அனுபவிக்கிறான் என்று தானேற்படும்.

ஸ்வப்பினனுபவம் போலவே பரலோகானுபவமு மென்பது.

ஆகவே ஸ்தூல சரீரமானது மற்றவர்களால் பார்க்கப்படினும் அதனுதவியின்றியே அவித்யாமூலம் ஓர்சரீரத்தை யடைந்து அதில் ஜாக்கிரத் காலத்திற் போலவே புதிது புதிதானவஸ்துக்களை இந்த ஜீவாத்மா ஸ்வப்பினத்தில்அனுபவிப்பானுனல், இந்த ஸ்தூல சரீரமானது அதைக் கொடுத்த கர்மாவின் முடிவேற்பட்டதும் நாசத்தையடைந்த போதிலும் வேறு சரீரத்தைத் தரும் புண்ணிய பாபகர்மங்காரணமாய் புதிதான தொரு சரீரத்தை யடைந்து அந்தச் சரீரமானது வஸிப்பதற்குத் தகுந்தபடி ஆண்டவனு லமைக்கப்பெற்ற லோகத்தை இந்த ஜீவாத்மா அடைகின்றான் என்று சொல்லுவதில் யாதும் தடையில்லை யென்றேற்பட்டது. இதுவரை கூறியதிலிருந்து, ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம் என இரண்டு சரீரம் ஜீவாத்மாவுக் குண்டென்றும், ஸ்தூல சரீரத்தில் அததற்கென்றேற்பட்ட விடங்களில்கண் காது மனம் முதலிய சூக்ஷ்ம சரீரங்களிருந்து கொண்டு ஸ்தூல சரீர முள்ள வரையிருந்து பின்னர் ஸ்தூல சரீரமழிந்ததும் தாங்களிருப்பதற்குப் போதிய வேறு ஒரு சரீரத்தைப் பற்றிக் கொண்டு முன்னிருந்த ஸ்தூல சரீரத்திலுண்டான அனுபவத்திற் கொப்பான அனுபவத்தை யடைகின்ற தென்றும் அது தான் ஜீவனுக்கேற்படும் மறுபிறப்பென்றும் ஏற்பட்

டது. மேலும் இத்தகைய ஜீவாத்மாவானவன், மரணகாலத்தில் இந்த ஸ்தூலத்தை விட்டு நீங்குங்கால், முக்தியுண்டாகும்வரை தன்னை விட்டு விலகாததான, கர்மேந்திரியம் க்ஞானேந்திரியம், பிராணபஞ்சகம், மனது இவைகளுடன் சேர்ந்து தான் வேறு லோகம், வேறு சரீரம் இவற்றை யடைகின்றனே யொழிய இவன் மட்டும் போவதில்லை யென்பதையும், இதுவரை கூறிய ஸ்வப்பினுனுபவத்தினின்றும், அறியவேண்டுவதும் மிகவு மவசியமாகிவிட்டது. ஆகவே வேறு சரீரம் ஜீவனுக்குண் டென்றும், அதை இவன் தனது கர்மமூலமடைகிறுன் என்றும், அவ்விதம் வேறு சரீரத்தை யடையும் பொழுது இந்த ஸ்தூல சரீரத்திலிருந்து விஷயானுபவஞ் செய்வதற்குபயுக்தமான கர்மேந்திரியம், க்ஞானேந்திரியம், பிராணன், மனது ஆகிய பதினறு பதார்த்தங்களுடனேயே போகிறுனென்று மேற்படினும், வேறு லோகமானது எங்கிருக்கின்றது? அதை யடைவதெப்படி? என்ற சங்கை நிகழும். அதனுண்மையைப் பின்வருமாறு அறிக.

ஸ்வர்க்க, நரகலோக நிருபணம்.

முற்கூறிய ஸ்வப்பினுனுபவகாலத்தில் இவன் குறுகின ஓர் அறையின் ஓர் மூலையில் படுத்துக் கொண்டானுயினும், காசி, பிரயாகை, மதுரை, ஸ்ரீரங்கம், அயோத்யா முதலிய தேசத்தில் தான் சென்றதாகக் காண்கின்றுனன்றே! அத்தேசங்களை இவனொரு சமயத்திலும் பார்த்ததுமில்லையே? அப்படிப்பார்க்காதிருந்தபோதிலும் ஸ்வப்பினுனுபவ காலத்தில் தான் கண்டதேசம், தான் அங்கு சென்றிருப்பது, அங்கு தானனுபவிக்கும் வஸ்துக்கள் ஆகியயாவையும் அச்சமயம் ஜாக்கிரத் காலத்திலனுபவிப்பது போலவே உண்மையாகவே அனுபவிக்கின்றுனன்றே! அதுபோலவே இந்த

ஸ்தூலதேஹமானது போனதும் சூக்ஷ்மசரீரத்துடன் பிராணிகளின் கர்மபலானுபவத்திற்காக ஆண்டவனால் படைக்கப்பட்ட ஸ்வர்க்க நரகாதிலோகங்களையும் இவனடைகிறான் என்று கொள்ளுவதில் யாதும் தடையில்லை.

ஆனால் அயோத்யா முதலிய தேசங்களை முன்சொன்ன மனிதன் நேரில் காணவிடினும் வேறுமனிதன் அத்தேசங்களை நேரில் போய்க் காணக்கூடியதாக விருக்கின்றன. நேரில் கண்டதாகவும் பலர் சொல்லுகின்றனர். ஸ்வர்க்க நரகாதி லோகங்களோ, நேரில் எவருலும் காணக்கூடியதாக வில்லை யாதலாலும், ஸ்வர்க்கத்தையோ, நரகத்தையோ நேரில் கண்டதாக சொல்லுபவர் எவரு மில்லாததாலும், அந்த லோகங்களிருப்பதாகச் சொல்லுவதை எவ்விதம் நம்பமுடியும் என்ற சங்கை நிகழும். அவ்விஷயத்தை இங்கு விளக்குவாம். நமது சுருதி, ஸ்மிருதி, புராணங்கள் ஸ்வர்க்காதி லோகங்க ளிருப்பதாகவே தெளிவா யுபதேசிக்கின்றன. அவ்விதமே நாரதர் முதலியமஹான்கள் அந்தந்த லோகங்களை நேரில் கண்டு, அவ்விதம் தான் கண்டதைப்பிறகு இவ்வுலகங்களி லுள்ளவர்க்குச்சொல்லி யிருப்பதாகவும், புராணங்களில் ஆங்காங்கு தெளிவாயுபதேசிக்கப் பட்டிருக்கின்றது. மேலும், அந்தந்த லோகவாசியான தேவர், பிதுருக்கள் முதலியவர்களுடன் மஹான்களான வியாஸர் முதலியோர் நேரில் பேசியிருப்பதாகவும், அதே புராணங்கள் கூறுகின்றன. இதைப் பொய்யென்று ஒருவன் சாதித்துவிட முடியுமோ? ஒருபொழுதும் முடியாது. ஆகவே ஸ்வர்க்கநரகாதிகள் தனித்தனி யேஅந்தந்தப் பிராணிகளின் கர்மபலனை யனுபவிப்பதற்காக ஆண்டவனா லமைக்கப்பட்டிருப்பதால் அந்த உலகங்களை இச்சரீரம்விட்டதும் இந்த ஜீவனடைகிறான் என்று சொல்லுவதில் யாதும் தடையில்லை.

சூரியமண்டலம் தேவலோகமென்றும், சந்திரமண்டலம் பிதுருலோகமென்றும் கூறல்.

இனி ஸ்வர்க்க நரகாதிலோகங்கள் எங்கிருக்கின்றன அவற்றை யடையும் முறையாது என்ற சங்கை நிகழும். அதைப் பற்றி பின்னர் எழுதுவாம்.

य एवं विद्वानुदगयने प्रमीयते देवानामेव महिमानं गत्वाऽऽदित्यस्य सायुज्यं गच्छत्यथ यो दक्षिणे प्रमीयते पितॄणामेव महिमानं गत्वा चन्द्रमसस्सायुज्यं सलोकता माप्नोति ॥

"முற்கூறியவாறு ஸகுணப்பிரும்மோபாஸனஞ் செய்யும் எவனொருவன் உத்தராயணத்தில் மரணத்தை யடைகின்றானோ அவன் தேவர்களுடைய ஐசுவரியத்தை (அணிமாதி சக்தியை) அடைந்து பின்னர் சூரியனுடன் கூட வஸித்தல் என்ற ஸாயுஜ்ஜியத்தை யடைகிறான். முற்கூறியவாறு ஸகுணப் பிரும்மோபாஸனஞ் செய்யாமல் கேவல கர்மானுஷ்டானஞ் செய்கின்ற எவனொருவன் தக்ஷிணாயனத்தில் மரணத்தை யடைகின்றானோ அவன் அக்னிஷ்வாத்தர் முதலிய பிதுரு தேவதைகளின் ஐசுவரியத்தை (அணிமாதிசக்தியை) அடைந்து சந்திரனுடன் கூட வஸித்தல் என்ற ஸாயுஜ்ஜியத்தையும், சந்திரனுடைய லோகத்தையுமடைகின்றான்." என்றதால் தைத்திரீயாரண்யகம் 10வது பிரபாடகம், 64வது அனுவாகத்தில் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி பார்க்கும்பொழுது சாஸ்திர முறைப்படி ஸகுணப் பிரும்மோபாஸனத்தையோ, கர்மானுஷ்டானத்தையோ செய்பவனுக்கு இந்த ஸ்தூல சரீரமானது விலகினதும் தேவர்களுடையவோ, பிதுருக்களுடையவோ அணிமாதி சக்திகளுண்டாகி, உபாஸகன் சூரியலோகத்தையும், கர்மானுஷ்டானஞ் செய்பவன் சந்திர லோகத்தையும் அடைகிறான் என்பது நன்கு விளங்கும். ஆகவே சூரிய

மண்டலமானது தேவர்கள் வசிக்கும் தேவலோகமென்றும், சந்திரமண்டலமானது பிதிருக்கள் வசிக்கும் பிதுருலோக மென்றும் ஏற்படுகின்றது.

சனி, செவ்வாய் இவர்களின் மண்டலம் நரகலோகமேன்பது,

இவ்விடத்தில் நரகத்தை இன்னவிடம் என்று சொல் லாவிடினும் வேறிடங்களிற் சொல்லியிருப்பதைக் கொண்டு சனி, செவ்வாய் இவர்களின் மண்டலத்தை நரகலோகமாகக் கொள்ளல் வேண்டும்.

சூரிய சந்திரமண்டலங்களை லோகமாகச் சொல்லுவதில் ஆக்ஷேபம்.

சங்கை—சூரிய பிம்பத்தையே கண்ணெடுத்தும் பார்க்க முடியாமலிருக்கும் பொழுது, அம்மண்டலத்தைப் புண்ணி யஞ் செய்தவர்களுக்கு அதன்பலனை யனுபவிப்பதற்கேற் பட்டபோக பூமியென்று சாஸ்திரம் சொன்னபோதிலும் நாம் அதை எவ்விதம் நம்பமுடியும்? இதுபோலவே சில இரவுகளில் சந்திர மண்டலத்தினின்றும் வெளிவீசும் சந்தி ரிகை உடம்பிற் பட்டமாத்திரத்திலேயே குளிர் ஜ்வரம். ஜன்னி முதலியன வந்து விடுவதை நாம் அனுபவத்திற் கண்டிருக்க அதற்கு நேர்மாறாக கர்மிகளுக்குச் சந்திரமண் டலத்தைப்போக பூமியாகச் சொன்னதையும் எவ்விதம் நம்பமுடியும், எனின்?

உத்தரம்—முன் சொன்ன தைத்திரீய சுருதியானது **देवानामेव महिमानं गत्वा**, என்றும், **पितृणामेव महिमानं गत्वा**, என்றும் சொல்லியிருப்பதைக் கவனிக்கும்பொழுது உபாஸ கனுகவோ, கர்மடனுகவோ உள்ள ஜீவனுக்கு இந்த ஸ்தூல சரீரம் போனதும், தேவர்களுக்கும், பிதிருக்களுக்கும் இயர்க்கையி லமைந்துள்ள அணிமா, லகிமா, மஹிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், வசித்வம், ஈசித்வம், காமாவஸாயித்

வம் என்ற அஷ்டசித்திகளும் உண்டாகின்றன வென்றும், அவற்றை யடைந்து சூரிய, சந்திரலோகங்களில் அந்தந்த லோகவாஸிகளான, தேவர்கள், பிதிருக்கள் இவர்களுடன் சேர்ந்து அந்தந்த லோகங்களில் தனது புண்ணிய கர்ம மூலம் நேரும் போகங்களை யனுபவிக்கிருன் என்றும் ஏற் படுகின்றது.

அணிமாதி சக்தியையடைந்து அங்கு வஸிக்கிருனேன்பது.

அணிமா முதலிய எட்டுசித்திகளாவன. (1) அணிமா—எவ்வளவு பெரியவுடம்பையும் அணுமாத்திரமாகச் செய்யும் திறமை. (2) லகிமா — எவ்வளவு கனமுள்ளவனுயினும் பஞ்சையும் விட லேசாகவாகி ஆகாசத்திற் செல்லுந் திறமை. (3) மஹிமா—எவ்வளவு சிறியவனுயினும் மலை, யானை, இவை போன்று விரிந்த வுருவத்துடனிருக்கும் திறமை. (4) ப்ராப்தி:—உலகிலுள்ள எந்த வஸ்துக்களையும் நினைத்த மாத்திரத்தால் தனதருகில் வரும்படி செய்து அவற்றை யனுபவிக்குந் திறமை. அதாவது: இந்த 4வதான ப்ராப்தி யென்ற சித்தியை ஒரு மனிதன் பெறுவானுயின் பூமியி லுருந்தபடியே சந்திர, சூரிய மண்டலங்களைத் தனதுவிரல் நுனியால் தொட்டு விடலாம். (5) ப்ராகாம்யம்—ஜலத்திற் போலவே பூமியிலும் முழுகிக் கிளம்பவும், சரீரத்திற்கு எவ் வித பீடையுமின்றி நெருப்பில் முழுகிக் கிளம்பவும் உள்ள திறமை. (6) வசித்வம், — ஆகாசாதிபஞ்ச பூதங்களையும், அப்பஞ்சபூதங்களா லுண்டான பௌதிக பதார்த்தங்களை யும் தனதிஷ்டப்படி நிறுத்தக்கூடிய திறமையை யடைவ துடன், அந்தப் பூதபௌதிக பதார்த்தங்களுக்குத் தானெந்த விதத்திலும் கட்டுப்படா திருக்கும் திறமை. (7) ஈசித்வம்—முற்கூறிய பஞ்சபூதங்களை தனதிஷ்டப்படி புதிப்பிக்கவோ, அழிக்கவோ, முன்போல தனித்தனி நிறுத்தவோ கூடிய

திறமை, (8) காமாவஸாயித்வம்—தனது ஸங்கற்பமாத்திரத்தாலேயே எதையும் சம்பாதித்துக் கொள்ளுந்திறமை. ஆகிய இவ்வெட்டுமே அணிமா முதலிய சித்திகளாகும். இத்தகைய அணிமாதிசித்திகளை தேவர், பிதுருக்கள் இவர்கள் இயற்கையிலே அடைந்தவர்களாய் சூரிய மண்டலத்தில் தேவர்களும், சந்திர மண்டலத்தில் பிதுருக்களும் வாசஞ்செய்கின்றனர். ஆகவே இப்பூமண்டலத்தி லிருக்கும் பொழுது, உபாஸனை, சாஸ்திரீய ஸத்கர்மம், இவைகளைச் செய்த உத்தம ஜீவர்கள் இந்த ஸ்தூலசரீரத்தை விட்ட பிறகு தேவர், பிதுருக்கள் இவர்களுக்கு இயற்கையி லமைந்துள்ள அணிமாதி சித்திகளை யடைந்தவர்களாய், தத்தமக்குரிய சூரிய, சந்திர லோகங்களில் வாசஞ்செய்து அங்குள்ள போகங்களை யனுபவிக்கின்றனர் என்றேற்படுவதால் முற்கூறிய ஆசங்கைக் கணுவுமிடமில்லை என்றறிக.

இந்தச் சரீரம் போனதும் வேறுதேஹம் வருங்காலம்.

இனி ஸ்தூல சரீரத்தை விட்டதும் புண்ணியபாபகர்மங் காரணமாய் வேறு சரீரத்தை யடைவதென்றால் இந்த ஸ்தூல சரீரத்தை விட்டதும் உடனே அடுத்த க்ஷணத்திலதை அடைந்து விடுகின்றானா? இல்லையேல் இந்தச் சரீரத்தை விட்டதற்கும் வேறுசரீரத்தை யடைவதற்கும் இடையில் ஏதேனும் காலவிளம்பமுண்டா? உண்டானால் அதன் விவரம் எப்படி என்ற சங்கை நிகழும். அதனுண்மை பின் வருமாறு:—சாந்தோக்யோபனிடதம் 8வது அத்தியாயம், 6வதுகண்டம், 5வது மந்திரத்தில்

स यावत्क्षिप्येन्मनस्तावदादित्यं गच्छत्येतद्वै
खलु लोकद्वारं विदुषां प्रपदनं निरोधोऽविदुषाम् ॥

"அந்த உபாஸகன் உயரக்கிளம்பப் போகிறவனுக்கொண்டு எவ்வளவு காலத்திற்குள் ஒருவன் தன் மனதைப்

பிரேரணை செய்வானே அவ்வளவு காலத்திற்குள் சூரியனை யடைந்து விடுகிறான். இந்தச் சூரியன் பிரும்மலோகத்து வாரமன்றோ? உபாஸகர்கள் சூரியன் வழியாகவே பிரும்ம லோகத்தை யடைகின்றனர்” என்று சொல்லப்பட்டிருக் கிறது. ஆகவே மனமானது எவ்வளவு காலத்திற்குள் ஒரு வஸ்துவைப்பற்றுமோ அவ்வளவு காலத்திற்குள் (அதாவது: பிரேதபாவமானது நீங்கினதும் இடையில் எவ்விதத்தாமத முமின்றி விரைவாகவே) சூரியனை அடைகிறான் என்று ஏற் படுகிறது. இதே நியாயந்தான் புண்ணிய கர்மானுஷ்டா னஞ் செய்து சந்திரமண்டலமான பிதிருலோகத்தை யடை யும் ஜீவர் விஷயத்திலும் என்று கண்டு கொள்ளவேண்டும். உபாஸனுபலத்தால் பிரும்மலோகத்தை யடையும் ஜீவர்கள் தேஜோமயமான திவ்ய சரீரத்தையும், புண்ணிய கர்மபலத் தால் பிதிருலோகத்தை யடையும் ஜீவர்கள் பிரேதபாவமா னது நீங்கினதுமே ஜலமயமான திவ்யசரீரத்தையும் அடை ந்து அந்தந்தலோகங்களை யடைகின்றனர் என்று பகுத் தறிந்து கொள்ளவேண்டும். சாஸ்திர நிஷித்தமான பாப கர்மங்களை மனமொழி மெய்களால் செய்யும் ஜீவர்கள் மட் டும் இந்த ஸ்தூலத்தை விட்டபின்னர் வாயவீயமென்றயா தன தேஹத்தை யடைந்து போகும்வழியில் யமதூதர்க ளால் செய்யப்படும் சிக்ஷைகளை யடைந்துகொண்டு இரண்டு அல்லது மூன்று முகூர்த்தங்களுள் நரகலோகத்தை யடை கின்றனர். இவ்விதமே

अंगुष्ठमात्रः पुरुषो हाहाकुर्वन्कळेबरात्। तदैवगृह्यते दूतैर्याम्यैः पश्यन्स्वकं गृहम्॥ यातनादेह आवृत्य पाशैर्बध्वा गळे बलात्। त्रिभिर्मुहूर्तैर्द्वाभ्यां वा नीयते तत्र मानवः॥ अंगुष्ठमात्रो वायुश्च कर्मभोगाय खेचरः। यातनादेहमासाद्य सहयाम्यैः प्रयातिच॥

“தனது வீட்டைப் பார்த்துக் கொண்டும் ஹா! ஹா!

எனக் கதறிக்கொண்டிருக்கின்ற அங்குஷ்டமாத்திரனை (சூக்ஷ்ம சரீரத்தை யடைந்தவனை) இந்த ஜீவன் தேஹத்தினின்றும் அப்பொழுதே யமனைச் சேர்ந்தவர்களான தூதர்களால் கிரஹிக்கப்படுகிறான். பிறகு யாதனாதேஹத்தில் யமபாசங்களால் சுற்றிகட்டி இரண்டு அல்லது மூன்று முகூர்த்தங்களுள் யமலோகம் கொண்டு போகப்படுகிறான். அங்குஷ்ட மாத்திரமானதும் வாயுமயமானதுமானதேஹ முள்ளவனாய் ஆகாசத்தில் சென்று யாதனா தேஹத்துடன் யமதூதர்களுடன் கூடவே செல்லுகிறான்" என்றதால் காருடம் முதலிய புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே உபாஸகர்களும் புண்ணியகர்மம் செய்தவர்களும் சரீரத்தை விட்டதும் பிரேதபாவம் நீங்கினதும் முறையே பிரும்மலோகத்தையும், சந்திரமண்டலத்தையு மடைகின்றனர் என்றும், பாபிகள் இரண்டு அல்லது மூன்று முகூர்த்தங்களில் நரகத்தையடைகின்றனர் என்றும் கண்டுகொள்க.

அர்ச்சிராதிமார்க்கம்.

இதுவரை கூறியதிலிருந்து பகவதுபாஸனம் செய்த ஜீவர்கள் உபாஸனாபலத்தால் இந்தச் சரீரத்தை விட்டு பிரேதபாவம் நீங்கிப் பரலோகம் செல்லும்பொழுது கர்மேந்திரியங்கள் 5, க்ஞானேந்திரியங்கள் 5, பிராணன் 5, மனஸ் 1, ஆக பதினாறு பதார்த்தங்களுடனும், ஸுஷும்னா நாடீ வழியாகக்கிளம்பி முதலில் அர்ச்சிரபிமானி தேவதையையும், அதற்குப்பிறகு அஹரபிமானி தேவதையையும், பிறகு சுக்லபக்ஷாபிமானி தேவதையையும், அதற்குப்பின்னர் உத்தராயணாபிமானி தேவதையையும், பின்னர் ஸம்வத்ஸராபிமானி தேவதையையும், அங்கிருந்து தேவலோகாபிமானி தேவதையையும், அங்கிருந்து வாயு அபிமானி தேவதையையும், பிறகு ஆதித்யன் என்ற தேவதையை

யும், அங்கிருந்து சந்திரன் என்ற தேவதையையும், பிறகு வித்யுத் என்ற தேவதையையும், அங்கிருந்து வருணன் என்ற தேவதையையும், அங்கிருந்து இந்திரன் என்ற தேவதையையும், அங்கிருந்து பிரும்ம தேவனையும், அடைந்து அந்த பிரும்மலோகத்தில் தனது உபாஸனைக்குத் தக்கபடியான பலவிசேஷங்களை யனுபவிக்கின்றனர்.

பலத்தில் ஆசைகொண்டு கர்மங்களைச் செய்கின்றவர்கள் தூமாதிமார்க்கவழியாய் சந்திரலோகத்தை யடைகின்றனர். தூமாதிமார்க்கமாவது:-இந்தச் சரீரத்தினின்றும்கிளம்பும் ஜீவன் முதலில் தூமாபிமானி தேவதையையும், பிறகு ராத்திரியின் அபிமானி தேவதையையும் பிறகு கிருஷ்ண பக்ஷாபிமானி தேவதையையும், பிறகு தக்ஷிணாயனாபிமானி தேவதையையும், பிறகு பிதுருலோகாபிமானி தேவதையையும், பிறகு ஆகாசாபிமானி தேவதையையும், அங்கிருந்து சந்திரமண்டலத்தையும் அடைகின்றான் என்பதாம். இங்கு சொல்லிய தூமாதிமார்க்கமாக சந்திரமண்டலத்தையடைந்த ஜீவர்கள் அந்த லோகத்தில் தாங்களுடைய சுகானுபவத்திற்குரிய புண்ணிய கர்மங்களின் முடிவில் திரும்பவும் பூலோகத்தை யடைகின்றனர் என்றும் சுருதி யுபதேசித்திருக்கின்றது. ஆகவே இதுபோன்ற சாஸ்திர வசனங்களைக் கொண்டு பார்க்கும்பொழுது சூரியமண்டலமானது ஸகுணப் பிரும்மோபாஸனஞ்செய்தவர்களுக்கு அத்தகைய உபாஸனா பலனை யடைவதற்கு ஏற்பட்ட ஸ்தானமென்றும், சந்திரமண்டலமானது சாஸ்திரியமான புண்ணிய கர்மங்கள் செய்தவர்க்கு அக்கர்மபலனை யனுபவிப்பதற்கு ஏற்பட்ட ஸ்தானமென்றும், ஏற்படுகின்றது. ஆனால் இந்த விடத்தில் சூரியமண்டலத்திற்கு அன்னியமாய், வைகுண்டமென்றும், கைலாசமென்றும் தனியாய் லோகவிசேஷங் களிருக்கின்ற

வென்றும், அந்த லோகங்களுள், விஷ்ணுவை உபாஸித்தவர் வைகுண்டத்தையும், சிவனை உபாஸித்தவர் கைலாசத்தை யும் அடைந்து அங்கே பகவத் கைங்கரியம் செய்து கொண்டு எப்பொழுதுமே வாசஞ் செய்கின்றனர் என்றும், அந்தந்த லோகத்தை யடைகின்ற உபாஸகர்களும் முற்கூறிய அர்ச்சி ராதி மார்க்கமாகவே செல்லுகின்றனர் என்றும் வெகுவிரி வாய் வேதாந்தசாஸ்திரங்களிற் சொல்லியிருப்பதால் அவ் விஷயத்தை குருமூலம் நேரில் வேதாந்தவிசாரம் செய்தே தெரிந்து கொள்ளவேண்டும்.

சங்கை — பகவதுபாஸனஞ் செய்தவர்களோ, வேறு புண்ணியகர்மம் செய்தவர்களோ எவர்களேனும் இந்தச்சரீ ரத்தை விட்டதும் உடனே தத்தமது ஊழ்வினைக் கேற்றபடி வெவ்வேறு லோகங்களையடைந்து விடுகின்றனர் என்றால் ஜீவனில்லாதப் பிரேத சரீரத்தை சிலவைதிக மந்திரங் களைச் சொல்லிக்கொண்டு சிலர் தஹனஞ் செய்கின்றனர். துறவியின் சரீரமானல் பூமியில் புதைக்கின்றனர். சிலர் கங்கை முதலிய புண்ணிய நதியில் விட்டு விடுகின்றனர். அவ்விதம் ஏன் செய்யவேண்டும்? ஜீவனற்ற இந்தச் சரீரத் தில் செய்யப்படும் வைதிக காரியத்திற்கும், வேறுலோகம் சென்ற ஜீவனுக்கும் யாது ஸம்பந்தமெனின் ?

உத்தரம் — **खननं दहनं त्याग इति या त्रिविधोच्यते। शरीरसंस्क्रिया साऽऽस्य परलोकजयावहा ॥ विधिः श्मशानसंयुक्तो योऽन्यस्संचयनादिकः। कर्मोपयुक्तदेहस्य प्रतिपत्यर्थ एवहि ॥**

"பூமியில் புதைத்தல், நெருப்பிலிட்டு எரித்தல், நதியில் போடல் எனமூன்றுவிதமான சரீர ஸம்ஸ்காரமானது இச் சரீரம் விட்டுவெளியேறின ஜீவனுக்கு பரலோகப் பிராப்தி யைத் தருகின்றது. மேலும் சுடுகாட்டில் செய்யப்படும்

ஸஞ்சயனம் முதலிய காரியமானது இவனது ஊழ்வினையின் மூலம் பின்னர் நேரும் அந்தந்த சரீரத்தை யடைவதில் உபயோக முள்ளதாக ஆகின்றது" என்றதால் ஸம்பந்தம் ஸ்மிருதி சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதைக் கவனிக்கும் பொழுது கனனம், தஹனம், தியாகம், இம் மூன்று காரியங்களுள் யாதானும் ஒன்று மந்திர பூர்வகமாய் எந்த சரீர விஷயத்தில் செய்யப்படுகின்றதோ அந்த ஜீவனுக்குத்தான் தனது ஊழ்வினை மூலம் நேரும் பரலோகப் பிராப்தியேற்படும் என்றும், அதற்குப் பின்னருள்ள, சஞ்சயனம், பிண்டதானம் முதலிய காரியங்களால் இந்த சரீரம் விட்டபின்னர் வேறு சரீரமானது இவனால் அடையப்படுகின்றது என்றும் ஏற்படுகின்றது. ஆகவே இந்த ஜீவன் எவ்வளவு கர்மோபாஸனங்களைச் செய்திருந்தபோதிலும், சவசரீரத்தில் செய்யப்படும் இந்த வைதிகஸம்ஸ்காரமும் சேர்ந்துதான் அவனது கர்மங்கள் தமது பலனைத் தருகின்றன வென்றும் திருடமா யேற்படுகின்றது.

சங்கை—ஒருவன் வெகுபாடுபட்டு செய்தகர்மோபாஸனங்கள் தங்கள் பலனைத் தரும் விஷயத்தில் ஸ்வதந்திரமாய்ச் சக்தியற்றனவாக ஆகுமாயின் சக்தியற்ற அக்கர்மோபாஸனங்களைச் செய்வதால் யாதுபயன்? எனின்.

உத்தரம்—ஒருவன் எவ்வளவோ பாடுபட்டுத்தேடிய பொருளைக் கொடுத்து ஜர்மன் முதலிய வேறு தீவுகளுக்குச் செல்லுவதற்குரிய ஒரு சீட்டை வாங்கி யிருக்கிறானயினும், நமது பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரின் அனுமதியும் அதற்கிருந்தாலன்றோ சொந்தப் பொருளைக்கொடுத்து அவன் வாங்கின பிரயாணச் சீட்டு உபயோகப்படுகின்றது. இல்லையேல் பிரயாணச்சீட்டு இவன் கைவசமிருந்தும் வேறு தேசம் செல்ல முடியாதவ னாகின்றானன்றோ? அதுபோலவே தான் எவ்

வளவு கர்மோபாஸனங்களை செய்திருந்த போதிலும் புத்திராதிகளாற் செய்யப்படும் சவசரீரஸம்ஸ்காரமும், சேர்ந்தால் தான் பயனேற்படுகின்றது. இல்லையேல் பரலோகத்தை இவன் ஒருபொழுதும் அடைய முடியாதென்பதில் யாதும் தடையில்லை. மேலும், இதுபோன்ற விஷயமாய் நமது சிராத்த உபன்னியாஸத்தில் விரிவாய் எழுதியிருப்பதால் அங்கு அதைக் காண்க.

சங்கை—அங்ஙனமாயின், தஹனம், ஸஞ்சயனம் இவற்றை மட்டும் செய்தால் போதுமே? வீட்டில் ஏதோ ஒரு யிடத்தில் கல்லொன்றை ஊன்றி முதல்நாள் தொடங்கி பத்து தினம்வரை ஒவ்வொருநாளும் அங்கு திலதர்ப்பணமும், பிண்டதானமும் செய்யப்படுவது அனுவசியமானதன்றோ? எனின்

உத்தரம்—சரீரத்தை விட்ட ஜீவனைக் குறித்து 10 தினங்களில் செய்யப்படும் பிண்டதானத்தாலேயே அந்த ஜீவனுக்கு அடுத்த சரீரத்தில் ஏற்படவேண்டிய அவயவங்கள் பூர்த்தியாய் உண்டாகின்றன. இவ்விதமே

प्रथमेऽहनि यः पिंडस्तेन मूर्धा प्रजायते। चक्षुःश्रोत्रे नासिके च द्वितीयेऽहनि जायते॥ भुजौ वक्षस्तथा ग्रीवातृती येऽहनि जायते। नाभिस्थानं गुदं लिंगं चतुर्थेऽहनि जायते॥ ऊरूतु पञ्चमे ज्ञेयौ षष्ठेचर्म प्रजायते। सप्तमे तु शिरा सर्वा जायते नात्र संशयः॥ अष्टमे तु कृते पिंडे सर्वरोमाण्यनन्तरम्। नवमे वीर्यसंपत्तिर्दशमे क्षुत्परिक्षयः॥ दशमेन तु पिंडेन तृप्तिः प्रेतस्य जायते। आशौचान्ते ततस्सम्यक्पिंडदानं समाप्यते॥ ततःश्राद्धं प्रदातव्यं सर्ववर्णेष्वयं विधिः। एकोद्दिष्टात्पिशाचत्वं पितृत्वं पिंडयोगतः॥

"*முதல் நாள் பிண்டதானத்தால் தலையுண்டாகின்றது. இரண்டாவது நாள் பிண்டதானத்தால் கண்களும், காதுகளும் உண்டாகின்றன. மூன்றாவது நாள் பிண்டதானத்*

தால் கைகள், மார், கழுத்து இவைகளுண்டாகின்றன. நான்காவது நாள் பிண்டதானத்தால், நாபி (உந்தி) குதம், லிங்கம் (ஆண்பெண்குறி) இவைகளும், 5வது நாள் பிண்டதானத்தால் துடைகளும், 6வது நாள் பிண்டதானத்தால் தோலும், 7வது நாள் பிண்டதானத்தால் எல்லாநரம்புகளும், 8வது நாள் பிண்டதானத்தால் உடம்பிலுள்ள எல்லா ரோமங்களும், 9வது நாள் பிண்டதானத்தால் வீரியமும், 10வது நாள் பிண்டதானத்தால் பிரேததிருப்தியும் உண்டாகின்றது. ஆசௌசத்தின்முடிவில் பிண்டதானம் முடிவடைகின்றது. அதன் பிறகு சிராத்தம் செய்தல் வேண்டும் என்பது எல்லாஜாதியிலும் பொதுவானவிதியாகும். மேலும் ஏகோத்திஷ்டத்தால் பிசாசத்தன்மையின் நிவிருத்தியும், பிண்ட ஸம்யோஜனத்தால் பிதிருத்தன்மையும் உண்டாகின்றது'' எனரிச்யசிருங்கர் என்ற மஹருஷி சொல்லியிக்கிறார். ஆகவே இந்தச்சரீரத்தை விட்டுக் கிளம்பின பின்னர் ஜீவனுக்கு தனது ஊழ்வினைப் பயனுயுண்டாகும் சரீரத்திலுள்ள அவயவங்கள் எவ்விதக்குறைவையும் அடையாமல் உண்டாக வேண்டுவதற்கு 10நாள் பிண்டதானம் செய்தல் அவசியமானதாக ஆகிவிடுகின்றது. சவசரீரத்தில் செய்யப்படும் தஹனம் முதலிய ஸம்ஸ்காரங்களால் இதைவிட்டு நீங்கின ஜீவனுக்கு பலனன்மையுண்டாவதாக நமது ஆரிய சாஸ்திரமூலமேற்படுவதால் அவற்றை முறைபிறழாது செய்தல் அவசியமானதென்றும் ஏற்பட்டது.

மேலும் ஒரு ஜீவன் இந்த ஸ்தூலதேஹத்தை விட்டதும் உடனே அர்ச்சிராதி மார்க்க தேவதைகளோ, தூமாதி மார்க்க தேவதைகளோ இவனை யங்கிகரிப்பதில்லை. இந்த ஜீவன் குடியிருந்த சரீரத்திற்குச் செய்யப்படும் ஸம்ஸ்காரத்தையும், பின்னர் செய்யப்படும் பிண்டதானம் ஏகோத்திஷ்

டம் முதலிய காரியங்களையும் முறைப்படி செய்து பிரே தத்துவ நிவிருத்தியேற்பட்ட பின்னரே இவனை ஏற்று தத் தமது வழியில் அழைத்துச் செல்லுகின்றனர். இல்லையேல் அர்ச்சிராதி தூமாதி மார்க்தேவதைகள் இவனதருகில் வரு வதேஇல்லை. இவ்விஷயத்தில் பொருத்தமானதொரு திருஷ் டாந்தம் கூறுவாம், அதாவது: நாம்போஸ்டுதுவாராவாக ஒரு ஸாமானை அனுப்பவேண்டி அதற்கு வேண்டிய ஸ்டா ம்பை யொட்டிஇன்ஷியூர் செய்வதாக வைத்துக்கொள் வோம். அந்த சாமானை நமதிஷ்டப்படி கட்டி போஸ்டாபீ ஸில் கொண்டு போய் கொடுத்தால் அதைப் போஸ்டுமாஸ் டர் வாங்குவதில்லை. அவர் ஒப்பும் படியான தொருமுறை யில் நாமே அதற்கு அரக்கு முத்திரை யிட்டு அவரிடம் கொடுத்தால் அதை அவர் ஏற்றுக்கொள்ளுகிறார். நாமும் சந்தோஷமாய் வீடுவந்து சேருகிறோம். இங்கு கவனிப் போம். நாம் பார்ஸலுக்குள் வைத்திருந்த ஸாமான் போய்ச் சேரவேண்டிய இடம் போவதை நாம் நேரில்நின்று பார்க் கின்றோமா? இல்லை. ஆயினும் அதற்குச்செய்யவேண்டிய முறையைச் சட்டபடி செய்து விட்டோம், ஆகையால் சேர வேண்டிய இடம் போய் சேர்ந்து விடும் என்றல்லவோ நம் புகிறோம். இதுபோலவே இந்த ஜீவன் பரலோகம் செல்லு வதற்கு தனது கர்மாவாகிற அதற்கு வேண்டிய ஸ்டாம்பு களை யொட்டி விட்டானாயினும், புத்திராதிகளால் செய்யப் படும், தஹனாதிகர்மங்களாகிற முத்திரையும் அதற்கிட்டா லல்லாது போஸ்டுமாஸ்டர் முதலியோர் ஸ்தானத்திலுள்ள தேவதைகள் இந்த ஜீவனாகிற இன்ஷியூர்சாமானை ஒப்புவ தில்லை. ஆகவே அவன் பரலோகம் போய் சேராமல் இங்கே யே பிரேதரூபமாய் அலைந்து திரியவேண்டிவருகிறது. ஆனால் பிரத்தியக்ஷமான ரஜாங்கத்தாரால் போஸ்டாபீஸ்

ஒழுங்காய்நடைபெறுகின்றது. இந்தவிடத்தில் தேவதைமுதலியோர் நேரில்காணப் படவில்லையே என்ற சங்கைநிகழும். இதற்கு நமது சிராத்த உபன்னியாசத்தில் விரிவாய் விடையளித்திருப்பதால் அதைக்கொண்டு இச்சங்கையைப் போக்குக. புத்திராதிகளால் செய்யப்படும் இத்தகைய ஸம்ஸ்காரம் அவசியமாகின்றமை பற்றியே நமது ஆரியகுடும்பங்களில் இது காறும் இக்காரியத்தை வெகுகருத்துடன் செய்துவருகின்றனர் என்றேற்பட்டது.

இதுவரை கூறியதிலிருந்து சரீரத்திற்குப்புறம்பாய் ஜீவன் உண்டென்றும், அவன் பரலோகத்தை யடைந்து திரும்பவும் மறுபிறப்பை யடைவதுண்டென்றும் ஏற்படுவதால் நமது ஆரியதேசத்தில் ஜனித்த ஒவ்வொரு ஆரியரும் சாஸ்திரங்களை நம்பி அதில் சொல்லியபடி பகவதுபாஸனஞ் செய்து மறுபிறப்பென்ற மாதிரு கர்ப்பவாஸக் கிலேசத்தை யொழிக்கும் வழியைக் கடைபிடித்து நடத்தல் அவசியமானது என்றும் ஏற்பட்டது.

குறிப்பு—மறுபிறப்பும், லோகந்தரமும் உண்டு என்ற விஷயமாக இதுவரை நாம் எழுதிய இந்த வியாஸத்தில் எமது புத்திக்கெட்டியவரை சாஸ்திர வசனங்களை ஆதாரமாகக் கொண்டு எழுதியிருப்பதால், இதுவிஷயமாகப் பின்னும் உதயமாகும் சந்தேஹங்களை வேதாந்தசாஸ்திரங்களைக் குருவினிடமிருந்து நேரில்கற்பதிலிருந்தே போக்கிக்கொள்ளவேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இவ்விதமே—

इत्थं यः कर्मबद्धो भ्रमति परवशः प्राणभृज्जन्मसंघैः
दुःखस्यान्तं नवेत्ति स्मरति न च जनिव्रातमज्ञानयोगात् ।
तं सर्वानर्थमूलप्रशमनविधिनास्वात्मराज्येऽभिषेक्तुं
तात्पर्येण प्रवृत्ताश्श्रुतिशिखरगिरस्सूत्रभाष्यादयश्च ॥

என்றதால் பெரியாரும் உபதேசித்திருக்கின்றனர்.

புனர்ஜன்மமும் லோகாந்தரமும் முற்றிற்று.

நம்மால் தமிழில் உரை எழுதி தேவநாகரலிபியில் மூலத்துடன் வெளியிடப்பட்ட புஸ்தகங்கள்.

1. ருக் யஜுஸ் ஸாமவேதிகளின் சந்தியாவந்தனம் ரூ. 1-4-0
2. நவக்கிரஹாராதனக்கிரமம்—இதில் நவக்கிரஹஸ்தோத்திரம், கவசம், அஷ்டோத்தரம், ஆதித்யஹிருதயம் இவை அடங்கி இருக்கின்றன. கிளேஸ் ரூ. 1-4-0. ரப் ரூ. 1.
3. மந்திரப்பிரச்னம்—விவாஹம், உபநயனம் முதலிய கர்மங்களின் மந்திரங்கள் இதில் அடங்கி இருக்கின்றன. கிளேஸ் ரூ. 3. ரப் ரூ. 2-8-0.
4. புருஷசூக்தம் முதலியன—இதில் புருஷசூக்தம், ஸ்ரீசூக்தம், துர்க்கா சூக்தம், கனகதாராஸ்தவம் என்ற லக்ஷ்மீஸ்தோத்திரம் இவைஅடங்கி இருக்கின்றன. ரூ. 1-8-0.
5. கோபிகாகீதம்-ஸ்ரீகோபால பக்தியைப்புகட்டுவது அ 12.
6. பிருஹத்ஜாதகம்—சோதிடத்தை யப்யசிப்போருக்கும், அப்யசித்துப் பலன் சொல்வோருக்கும் மிக்கத் தேவையானது. ரப் ரூ. 7. கிளேஸ் கிளே ரூ 8.
7. கோசரபலநிர்ணயம் — இவ்வொன்றினுதவியால் எதிர்காலபலனை எவரும் நிச்சயமாயறியலாம். அணா. 12.
8. ஜாதகசந்திரிகை—சோதிட சாஸ்திரமாகிற இரும்புப் பெட்டியைத் திரக்க திரவுகோல் போலுள்ளது. ரூ 1.
9. யஜுர் வேதிகளின் ஸூர்யநமஸ்காரமந்திரங்கள் ஆதித்ய ஹிருதயத்துடன் அணா 4.
10. சிராத்தம்—இவ்விஷயமாய்ச் செய்யப்படும் ஆக்ஷேபங்களுக்கு தக்க சமாதானமடங்கிய தமிழ் உபன்னியாஸம் அணா 3.
11. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்—இதில் விஷ்ணுஸஹஸ்ரநாமம், விஷ்ணுஸஹஸ்ர நாமாவளி, பஞ்சாயுத ஸ்தோத்திரம், த்வாதசநாம பஞ்ஜரம், தசாவதார ஸ்தோத்திரம், பகவத்யான ஸோபானம், கோபாலவிம்சதி, கிருஷ்ணத்வாதசமஞ்சரீ, ஸ்ரீகிருஷ்ணஷ்டோத்தரம் இவை தேவநாகர லிபியிலுள்ளன. அணா 5.
12. அருணம் முதல் பிரச்னம் (தமிழுரையுடன்). ரூ. 2.
13. நீதிசதகம் மூலம் மட்டும் அணா 2.
14. இந்திராக்ஷீ சிவகவச ஸ்தோத்திரம். அணா. 2.
15. ஸ்ரீருத்திரம்—கிரந்த லிபியில் மூலமும் தமிழுரையும் ரப் ரூ. 1-0-0. கிளேஸ் ரூ. 1-8-0.
16. புனர்ஜன்மமும், லோகாந்தரமும், ஓர் உபன்னியாஸம். விலை அணா. 4.

கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,

72, பெரிய தெருவு, திருவல்லிக்கேணி.